393

தொகுதி 8.] 1929ஹ செப்டம்பர்மீ 1௨ [பகுதி 8

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி.குப்புசாமிமுதலியார்

பிரசுரகர்த்தர்
...சாமி முதலியார்,
...லையம், சென்னை.

JL
ฅ2H, N22MM
N29.8.8.
181537
REGISTRAR OF BOOKS
18 OCT 1929
MADRAS

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ளு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்காதாஸின் வெற்றி" என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி இரகசியம் 3-ம் பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்காதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

கிருஷ்ணன்.—தாங்கள் எள்ளளவுகூட சந்தேகப்பட வேண்டாம். நானும் எச்சனுமே இந்த வேலையைப் பார்த்துக்கொள்வோம். எச்சனுடைய கண்ணிலிருந்து ஒரு எறும்புகூட தப்பமுடியாது. அவன் இங்கே அங்கே எங்குமே யிருப்பான். இதோடு இன்னொரு அனுகூலமு மிருக்கிறது. அந்த வீட்டிற்கு எதிரிலிருக்கும் ஹோட்டல்காரன் எனக்குத் தெரிந்தவன். வேண்டிய எல்லா உதவியும் செய்வான். ஹோட்டலின் முன்பக்க மிருக்கும் ஒரு அறையில் மறைந்துகொண் டிருந்தால் ஒரு விநாடிகூடத் தவறாமல் அவ்வீட்டில் நடக்கிற யாவும் தெரிந்துகொள்ளலாம்.

பிரபு:—"சரி நான் உன்னைப் பூராய் நம்புகிறேன். இந்தா இப் பத்து பவுன்களைத் தற்சமயம் செலவிற்கு வைத்துக்கொள்" என்று பவுன்களைக் கொடுத்தார்.

உடனே யிருவரும் பிரிந்து சென்றார்கள். பிரபு தன் மாளிகையை நோக்கிச் செல்ல, கபட கிருஷ்ணன் மிக்க சந்தோஷத்தோடு ஹோட்டலுக்குள் நுழைந்தான்.

186537
சென்னை-600 008

6 - வது அத்தியாயம்.

இரத்தினபுரி நகருக்கு ஐம்பது மைல் தூரத்தில் இராமபுரி என்ற ஒரு கிராம முண்டு. அக்கிராமத்தின் ஓரத்தில் ஒரு தனி வீடிருக்கிறது. அவ்வீடு ஒரு அழகிய தோட்டத்தின் மத்தியில் இருக்கிறது. அதில் வசிப்பவர்கள் ஒரு மூதாட்டியும் அவள் குமாரத்திகளாகிய நான்கு அழகிய பெண்களுமே. அம்மூதாட்டியின் பெயர் மரகதவல்லி. சுமார் 45 வயதுள்ளவள். பெண்களின் பெயர்கள்

இரங்கம்மாள், அம்புஜம், ஜானகி, மீனும்பாள். முதல் கூறிய மூத்த பெண்ணுக்கு 22 வயது கடைசியில் கூறப்பட்ட கடைசி கன்னிகைக்கு 16 வயது. அக்கிராமத்தில் உள்ளவர்களுக்கு அவர்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? செல்வம் பொருந்திய நிலையிலிருக்கும் இவர்களுக்கு எவ்வழியாய் இவ்வளவு வருமானம் கிடைக்கிறது? முதலிய ஒரு சங்கதியும் தெரியாது. அவர்கள் சில வருடங்களாய் அங்கு வந்து வசிக்கிருர்கள் என்பது மட்டுமே தெரியும். கிராமத்திலுள்ளவர்கள் யாரும் அங்கு செல்வதில்லை. ஆனுல் ஒருவிஷயம்மட்டும் அவர்களுக்குத் தெரியும்: அதாவது இளவரசனும் அவனுடைய சினேகரும்மட்டுமே அந்த வீட்டிற்கு அடிக்கடி வருவதுண்டு. அச்சமயங்களில் அங்கு விருந்தும் கேளிக்கைகளும் ஆர்ப்பாட்டமாய் நடப்பதுண்டு. இவற்ருல் அவ்வூரார் தங்களுக்குள் ஏதோ ஒரு தீர்மானம் செய்துகொண்டு அவர்களுக்குள்ளேயே குசுகுசுவென்று பேசிக்கொள்வார்கள்.

முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த அதேதினம் இரவு எட்டுமணி யிருக்கும். அச்சமயம் இரண்டு புரவிகள் பூட்டப்பட்ட ஒரு அழகிய வண்டிவந்து வீதியில் நின்றதும் இளவரசனும் சுகசிங்கம் பிரபுவும் வண்டியைவிட் டிறங்கி அவ்வீட்டிற்குள் நுழைந்தார்கள். உடனே வேலைக்காரர் வந்து வண்டியையும் குதிரையையும் வீட்டின் பின்புறமிருக்கும். இலாயத்திற்குக் கொண்டுபோய் விட்டார்கள்.

இவர்கள் எவ்வளவு இரகசியமாய் வண்டியைவிட் டிறங்கி வீட்டிற்குள் நுழைந்துகொண்டாலும் வீதியிலிருந்த ஒரு மாத்தடியில் ஒளிந்துகொண் டிருந்த ஒரு முரட்டு மனிதன் சுகசிங்கம் பிரபுவைக் கண்டு இன்னுரென்று தெரிந்து

கொண்டான். அம்மனிதனுக்கு வயது 35 இருக்கும். பார்வைக்குப் பயங்கரமானவன். ஆள் சற்று குட்டையேயெனினும் பார்க்கும்போதே மிக்க முரடனென்றும் எதற்கு மஞ்சாத குரூரகுண முடையவனென்றும் பார்க்கும்போதே தோன்றிவிடும். வழியில் பிரயாணம் செல்லும் ஒரு மனிதன் எவ்வளவு தைரியசாலியே யாயினும் இவனைத் தனியே சந்தித்தால் நடுநடுங்கிவிடுவான். அவன் வண்டியிலிருந்து இளவரசனோடுகூட இந்தக் கிழப்பிரபு வந்ததைக் கண்டதே முணமுணவென்று சபித்தான்.

அவர்க ளிருவரும் வீட்டிற்குள் சென்றதே அந்த முரட்டு மனிதன் வீட்டின் பின்பக்க மிருந்துவரும் வழியையே நோக்கிக்கொண் டிருந்தான். சற்றுநேரத்திற்குள் அவ்வீட்டின் பின்புறப் பாதையிலிருந்து உயர்தரவேலைக்காரன் உடையணிந்திருந்த ஒருவன், யார் பார்த்துவிடுவார்களோவென்ற பயத்தோடு முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டே அம்முரட்டுமனித னருகில் வந்து,

"தானப்பா! இளவரசன் வந்துவிட்டான் பார்த்தாயா?" என்றான்.

தானப்பன்:—கோபு! வந்ததைப் பார்த்தேன். அவன்கூட இன்னொரு கிழத் தடிப்பயல் வந்தானே அவன் யார்?

கோபு:—அவன் இளவரசனுடைய கூட்டாளியாகிய சுகசிங்கம் பிரபுவேயன்றி வேறு யாருமில்லை.

தான:—நீ சொன்ன ஏற்பாட்டின்படி இளவரசன் தனியாகவே வருவானென்றும் எதிர்க்க வேண்டியது இரண்டேபேர்தான் இருக்குமென்றும் தானே?

கோபு:—ஆம். இளவரசன் இந்தக் கிழப்பயலைக் கூட அழைத்துவருவான் என்று எனக் கெப்படித்தெரியும்?

நான் அந்தக் கன்னிகைகளுக்கு உடை யுடுத்தும் தாதியிடமிருந்து தந்திரமாய்க் கிரகித்த சங்கதியால் இளவாசன் ஒருவன் மட்டுமே வருவதாய்த் தான் தெரிந்தது. ஆயினும் அந்தக் கிழப்பயல் வந்தது ஒருவிஷயத்தில் நமக்கு இலாபம் தானே. அவனுடைய பையிலிருக்கும் பணம், மோதிரங்கள், பொன் கெடியாரச் சங்கிலி முதலியயாவும் இருக்கின்றனவல்லவா ?

தான:—ஆயினும் சமாளிக்கவேண்டு மல்லவா ?

கோபு:—ஏன் ? ஆட்கள் யாவரும் வந்திருக்கிறார்களல்லவா ? இந்த ஒரு கிழப்பயலாலா நீ தோல்வி யடைந்து விடுவோமென்று அச்சங் கொள்கிறாய் ?

தான:—"சே சே! அதற்கல்ல பயப்படுவது. வேறுவித ஆபத்திருக்கிறது. இளவரசன் தனியாயிருந்தால் சங்கதியை வெளியிடவேமாட்டான். போலீஸ்காரருக்கும் தெரிவிக்கமாட்டான். ஏனெனில் அப்படிச் செய்தால் தான் இந்த வீட்டிற்கு இரகசியமாய் வந்துபோகும் சங்கதி வெளியாய்விடும்; அதனால் இக்கன்னிகைகளின் பெயரழிந்துபோம். அவர்களுக்காகவே சங்கதியை வெளியிடமாட்டான். இந்தக் கிழப்பிரபுவோ அப்படி யல்ல. இவன் இக்குடும்பத்தை வந்து காண்பதால் யாரும் வித்தியாசமாய் ஒன்றும் நினைக்கமாட்டார்கள். ஆகையால் இவன் அச்சமின்றி போலீசுக்கு ரிபோர்ட் செய்துவிடலாம்; இப்படியன்றோ சங்கதி யமைந்திருக்கிறது. இல்லாவிட்டால் இக்கிழப்பயலை யடக்கமுடியாதென்று நான் அஞ்சுகிறேன். ஒருக்காலுமில்லை. இப்போது நான் கூறுகிற விவகாரம் உனக்குச் சரியாய் விளங்குகிறதல்லவா ?" என்றான்.

கோபு:—ஆகா. பலே பேஷாய் விளங்கிவிட்டது. உன்னுடைய நியாயவாத மனைத்தையும் ஒரே ஒரு சிறு வாதத்தால், அதிலும் உன் வார்த்தையைக் கொண்டே ஒரே பேச்சால் அடியோடு ஒரே மட்டமாய்த் தட்டி விடுகிறேன் பார். நீ கூறியபடி எப்படி இளவரசன் அந்தக் கன்னிகைகளுக்காக இச்சங்கதியை வெளியிட மாட்டானோ அப்படியே அவர்களுக்காகவே அந்தப் பிரபுவையும் வாய்திறக்க வொட்டாமல் அடக்கிவிடுவான். இதைப்பற்றி அக்கிழப்பிரபு போலீஸாருக்குத் தெரிவிப்பதாயின் இளவரசனும் தன்னோடுகூட வந்திருந்ததாய் அவன் கட்டாயம் வெளியிடவேண்டும்.

தான:—சரி; நீ கூறும் வார்த்தையை நான் பூரணமாய் ஒப்புக்கொள்கிறேன். ஆகையால் எவன் கூட விருந்தாலும் நாம் யோசிக்கவேண்டியது ஒன்றுமேயில்லை. நடக்கவேண்டிய வேலை நடக்கவேண்டியதே. இளவரசன் இங்கிருந்து எப்போது புறப்படுவான்?

கோபு:—இரவு பனிரெண்டுமணிக்கு வண்டியை ஆயத்தமாயிருக்கும்படி கட்டளை யிடப்பட் டிருக்கிறது.

தான:—"பேஷ், சரியான வேளை. பொழுது விடிவதற்குள் நல்ல வேடிக்கை நடக்கும். நான் போய் வருகிறேன்" என்றான்.

கோபு உடனே பூனையைப்போல் பின்பக்க வழியாய் வீட்டிற்குள் நுழைந்துகொண்டான். தானப்பனும் பாதையைவிட்டு தோட்டத்தில் இருட்டாயிருக்கும் இடத்தில் சென்றான்.

அன்று இரவு 12 மணி வரையில் அவ்வீட்டில் பெரிய கேளிக்கையா யிருந்தது. அதைப்பற்றி கொஞ்சமாவது விவ

ரித்துக் கூற நமக்குப் பிரியமில்லை. இரவு மணி 12 ஆயிற்று. இளவரசனுடைய வண்டி வாசற்படி யருகில் வந்து நின்றது. இளவரசனும் சுகஸிங்கம் பிரபுவும் வந்து வண்டியி லேறினார்கள். வண்டி யுடனே புறப்பட்டது.

இரவோ வானத்தில் கறியமேகங்கள் நிறைந்து பயங் கரக் காட்சியா யிருந்தது. மழை மின்னலும் இடியுமாய் வரும்போ லிருந்தது வண்டியிலிருக்கும் இராந்தல் வெளிச் சந்தான் பாதையில் தெரிந்தது. இளவரசனும் கிழப்பிரபு வும் இந்நேரம் தாங்கள் அனுபவித்த ஆனந்தத்தைப்பற்றி சந்தோஷமாய்ப் பேசிக்கொண் டிருந்தார்கள். வண்டி வேக மாய்ப் போய்க்கொண் டிருந்தது. அச்சமயம் திடீரென்று தடதடவென ஆட்கள் காலடிச்சத்தங் கேட்டது. இளவர சனும் கிழப்பிரபுவும் நடுநடுங்கிவிட்டார்கள்.

இளவரசன் "அட என்ன இது?" வென்று வண்டியி லிருந்த சாளரத்தைத் திறந்தான். கிழப்பிரபுவும் பெரிய திகிற்பட்டுக்கொண்டு தன் பக்கமிருந்த சாளரத்தைத் திறந் தான். ஆனால் இருவரில் ஒருவராவது சாளரத்தைத் திறந்து என்ன சங்கதியென்று பார்ப்பதற்குள் வண்டி தட் டென்று நின்றுவிட்டது. "குதிரைகளின் வாரை யுடனே அறு" என்று ஒரு முரட்டுக்குரல் கேட்டது. தட்சணம் வண்டி நிறுத்தப்பட்டதும் வண்டியின் மேல் தட்டில் ஆட் கள் ஏறும் சத்தம் கேட்டது. மறுநிமிடம் வண்டியின் இரு பக்கமும் இரண்டுபேர் வந்து நின்றதும் சாளரங்களைத் திறந் தார்கள். இளவரசன் இதற்குள் இவர்கள் கள்ளர்களே யென்று தெரிந்துகொண்டு "அடே கள்ளப்பயல்களே! யான் யார் தெரியுமோ?" என்றான்.

கள்ளன் "பத்திரம் கெட்டியாய்ப் பேசினால் தலைக்குள் குண்டு ஏறிவிடும்" என்று கூறிக்கொண்டே கைத்துப்பாக் கியை வண்டிக்குள் நீட்டினான்.

இவ்வளவு சங்கதிகளும் இரண்டொரு விநாடிகளுக்குள் நடந்தேறின. வண்டி வருவதற்கு முன்பே எட்டுபேர், எல்லோரும் ஆயுதம் தரித்தவர்கள்-முகமூடி யணிந்தவர்கள்-பாதையின் இருபுறமும் பக்கத்திற்கு நால்வாக ஒளிந்து கொண் டிருந்தார்கள். வண்டி வந்ததே ஏககாலத்தில் இரண்டுபக்கங்களி லிருந்தும் பாய்ந்தார்கள். முன்னமே செய்துகொண் டிருந்த ஏற்பாட்டின்படி இருவர் குதிரைகளைப் பிடித்துக்கொண்டார்கள். நான்குபேர் வண்டியின் மேல் தட்டிலேறி சாரதியையும், காலாளையும் பிடித்துக் கொண்டார்கள். மீதி இருவருமே வண்டியின் சாளரத்தைத் திறந்தார்கள். குதிரைகளின் வாரை யறு என்றவனும் இளவரசனிடம் பேசியவனுந்தான் அக்கூட்டத்திற்குத் தலைவன்.

கள்ளர் தலைவன் துப்பாக்கியைக் காட்டியதே யிளவரசன், "இவர்களுக்கு நாம் யாரென்று தெரியாது. தெரிந்தவுடனே பிரமையடைந்து விடுவார்கள்" என் றெண்ணிக் கொண்டு, "அடே ஜாக்கிரதை நான் இளவரசனென்று அறியாயா?" யென்று அதிகார தோரணையோடு கூறினான்.

கள்ளன் "அது தெரியும். பேசாமல் வாயை மூடிக் கொண் டிருந்தால் உனக்கு ஒரு ஆபத்தும் நேரிடாது" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே இளவரசன் பேசாமல் வண்டியில் அப்படியே சாய்ந்துவிட்டான். "இவர்கள் நாம் யாரென்று தெரிந்தே யிப்படிச் செய்வதானல் இவர்கள் சாதாரணமாய் வழிமடக்கிக் கொள்ளையடிக்கும் கள்ளராய் இருக்கமாட்டார்கள். என்ன காரணத்திற்காகவோ நம்மைப் பிடித்துக்கொண்டு போகிறார்கள்" என்று பெருந் திகிலடைந்தான். மடியில் கன மிருந்தால்தான் வழியில் பயம்

என்பதுபோல் இவன் எத்தனைபேர்க்குத் தீங்குகளிழைத்திருக்கிறான். எத்தனை உயர்குல மங்கையர்கள் கற்பையழித்து விட்டிருக்கிறான். ஆகையால் அவ்வாறு நயவஞ்சகத்தால் கற்பழிக்கப்பட்டு பிறகு கைவிடப்பட்டு சொல்லொணா துன்பங்களை யனுபவித்த பெண்களில் எவளுடைய தந்தையோ, சகோதரனோ என்னவஞ்சம் தீர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறானோ என்று பெருந்திகி லடைந்தான். சுகசிங்கம் பிரபுவோ பின்னும் கூறவேண்டுவதில்லை. அவர் வாய் திறக்கவே யில்லை. ஆனால் இளவரசனே யகப்பட்டுக் கொண்டிருப்பதால் அவ்வளவாய்ப் பெரிய ஆபத்து ஒன்றும் நேரிடாதென்று ஒருவாறு சற்று தைரியமா யிருந்தார். இவர்கள் வழி மடக்கப்பட்ட விடம் ஒரு பேட்டைக்கும் இன்னொரு பேட்டைக்கும் இடையிலுள்ள ஜன சஞ்சார மற்றவிடம். இளவரசனுனதால் நம்மை யார் என்னசெய்யப் போகிறார்கள் என்ற எண்ணத்தால் ஒருவரும் ஆயுதம் எதுவும் கொண்டுவரவில்லை. அந்தவிடத்திலிருந்து என்ன கூச்ச லிட்டபோதிலும் உதவி கிடைக்காது. என்செய்வார்கள் பாபம்.

இதற்கிடையில் கள்ளர் இருவர் வண்டியின் இருபக்கத்திலும் நிற்க மற்ற கள்ளர்கள் அறுத்துவிட்ட வாரைக் கயிறுகள் போட்டுக் கட்டிச் சரிப்படுத்தி வண்டியுடனே போகக்கூடியதாய்ச் செய்துவிட்டார்கள். வண்டியில் மேல் பக்கம் இருக்கும் சாரதி ஆட்காரன் இருவர்களோடும் இரண்டு கள்ளர்கள் ஏறிக்கொண்டு அவர்கள் கண்களைக் கட்டிவிட்டார்கள். கள்ளர் தலைவன் இளவரசனை நோக்கி,

"மகாராஜா தாழ்ந்த அந்தஸ்தி லிருக்கும் அடியேன் தங்களோடுகூட வண்டியி லுட்காருவதற்காகத் தயவு செய்து மன்னிக்கக் கோருகிறேன். இச்சமயம் அவ்வாறு

ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது'' என்று கூறிக்கொண்டே வண்டிக்குள் ஏறி இளவரசன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். வண்டி யுடனே புறப்பட்டது. வண்டிக்குள்ளிருக்கும் கள்ளன் இரண்டு சாளரங்களையும் மூடிவிட்டான். உள்ளே காரிருள் மூடிக்கொண்டது. கள்ளன் இளவரசனையும் பிரபுவையும் விளித்து "நான் ஒருவனாய் உங்களோ டிருக்கிறேனென் றெண்ணி ஏதாவது சேட்டைசெய்யக் கருதாதீர்கள். கையில் துப்பாக்கி ஆயத்தமாயிருக்கிறது. அதோடு வண்டியை நிறுத்தும் கயிறு மற்றொரு கையி லிருக்கிறது. உங்கள் கை யென்மேல் பட்டவுடனே வண்டி நின்றுவிடும். ஆனால் தட்சணம் தண்டனை தப்பாது. அதுவுமன்றி ஆட்க ளியாவரும் கூடவேதானிருக்கிறார்கள் பத்திரம் பத்திரம்'' என்றான்.

உண்மையாகவே ஆட்க ளியாவரும் இருக்கிறார்கள். வண்டியின்மேல் இருவர் உள்ளே ஒருவன் ஆக மூவர்மட்டுமே வண்டியிலிருந்தாலும் மற்ற ஐந்து கள்ளர்களும் தங்கள் குதிரைகளை மறைத்து வைத்திருந்தார்கள். வண்டி புறப்பட்டதும் அவர்கள் குதிரைகள்மே லேறிக்கொண்டு வண்டிக்குச் சற்று பின்னால் ஒருவர்க்குப்பின் சற்று தூரத்தில் ஒருவராய்க் காண்போர்கள் சந்தேகிக்கா வண்ணம் வந்துகொண் டிருக்கிறார்கள்.

வண்டி சுமார் அரைமணிக்குள் இரண்டு மூன்று இடங்கள் திரும்பியதால் இளவரசன் முதலியோர்களுக்கு தாங்கள் எங்கு கொண்டு போகப்படுவதென்றும் விளங்கவில்லை. சற்று நேரங்கழித்து வண்டி பெரிய பாட்டை வழியைவிட்டுக் கிளை வழியே திரும்பியது. இதை யறிந்ததே இளவரசன் கலவரமடைந்து, "இனியாவது எங்களை யெங்கு கொண்டு போவது? என்ன எண்ணத்தோடு கொண்டு போகிறீர்கள்

என்பதைப்பற்றி கூறலாகாதா'' வென்று மெதுவாய்த் தன் பக்கத்திலிருக்கும் கள்ளர் தலைவனைக் கேட்டான்.

கள்ளர் தலைவன் ''நீங்கள் சேஷ்டை செய்யாமல் பேசாது வருகிறவரையில் உங்கள் தேகங்களுக்கேனும் உயிர்களுக்கேனும் ஒரு தீங்கும் நேராது; அதற்குமேல் இப்போது கூறமுடியாது'' என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட இளவரசன் இவர்கள் எத்தகைய துஷ்டர்களோ நாமறியோம். ஒரு வெள்ளரிக்காயையரியும் அவ்வளவு அலட்சியமாகவே ஒரு அரசன் கழுத்தையும் அறுத்துவிடக்கூடிய ஆட்கள் நமது நகரிலிருக்கிறார்களே யென்று நினைத்துக்கொண்டு ஒரு மொழியும் கூறாமல் தனக்கு வந்த கோபத்தை யப்படியே யடக்கிக்கொண்டு மௌனமா யிருந்துவிட்டான். வண்டி கிளைப்பாதையில் திரும்பியது முதல் சுக சிங்கம் பிரபுவுக்கு நாவில் ஜலமேயில்லை.

பின்னும் கால்மணி கழித்து வண்டி ஒரு பக்கம் திரும்பிச் சுமார் நூறு கஜம் சென்று தட்டென்று நின்றது. இரண்டொரு நிமிடங்களில் பிரம்மாண்டமான கதவுகள் திறக்கப்படும் சத்தம் கேட்டதோடு நான்கைந்துபேர் குதிரைகள்மேல் வந்து வண்டி யருகில் நிற்பதுபோன்ற சந்தடியும் கேட்டது. வண்டிக்குள் ளிருந்தவர்கள் நாம் இறங்க வேண்டிய விடம் வந்து சேர்ந்துவிட்டோம்போ லிருக்கிறது என்று கருதிக்கொண்டார்கள். பிறகு பெரிய வாசற்படிக்குள் வண்டி போவதுபோலும் அந்த விடம் இருள் சூழ்ந்ததுபோலவும் தெரிந்தது. வண்டி யங்கு நின்றதும், வண்டியின் கதவு திறக்கப்பட்டது. கள்ளர் தலைவன் முதலில் கீழிறங்கினான்; பிறகு இராஜகுமாரனும் பிரபுவும் இறங்கினார்கள்.

அந்தோ இறங்கிப் பார்த்ததும் அவர்களுக்குப் பெருந் திகில் உண்டாய்விட்டது. ஏனெனில் எல்லாம் அவர்களுக்கு ஒரே பேரிருளா யிருந்ததேயன்றி, எங்கிருக்கிறோம் இதென்ன வீடா, பாதாள கிடங்கா, குகையா என்று ஒன்றுமே தெரியவில்லை. இளவரசன், பிரபு, சாரதி, ஆட்காரன், நால்வரையும் நான்கு கள்ளர் கையைப்பற்றி சற்று தூரம் அழைத்துச் சென்றார்கள். எதிரில் கொஞ்ச தூரத்தில் எங்கோ மினுக்கு மினுக்கென்று ஒரு தீபம் தெரிந்தது. அத் தீபம் ஒரு அறையிலிருக்கிறது. அதாவது அறையின் கதவு கொஞ்சம் திறக்கப்பட்டு தீபம் வாயிற்படிக்குள் வைக்கப் பட்டு இருக்கிறது. அதன் பின்பக்கம் இருண்ட கறுப்பு நிறமே புலப்படுகிறது. நால்வரும் அதைக் கண்டதே திகிலடைந்தார்கள். அதற்குள் கள்ளரின் தலைவன்,

"இந்த அறைக்குள் பேசாமல் செல்லுங்கள்" என்று அதட்டிக் கூறினான். நால்வரும் பேசாமல் அறைக்குள் சென்றார்கள். அந்த அறைக்குள் நான்கு பக்கம் சுவர்களிலும் நெடுகக் கருப்புத் திரைச்சீலை விடப்பட் டிருந்தது. தரையிலும் கறுப்புச் சீலையே போட்டிருந்தது. கறுப்பு நிறம் மரணக்குறி யாதலால் அகப்பட்ட நால்வரும் பெருந்திகிலடைந்து ஆவிசோர்ந்து விட்டார்கள். இவர்கள் உள்ளே சென்றதும் கதவு மூடப்பட்டது. கதவின் பின்னும் அதே கறுப்புத்திரை விடப்பட்டிருந்தது. அந்த அறையிலிருந்து வெளி செல்லும்வழி இன்னதென்றும் எங்கேயிருக்கிறதென்றும் தெரியவில்லை. இளவரசன் எவ்வளவு தைரியமும் அகங்காரமும் உடையவனேனும் மனக் குழப்பமடைந்து திகில்பட்டு விட்டான். பிரபுவோ சொல்லவேண்டியதில்லை. பூரணமாய் ஆவிசோர்ந்து விட்டது.

"நம்மைப் பிடித்தவர்கள் கள்ளராயிருந்தால் அங்கேயே நம்மிட மிருப்பதைப் பிடுங்கிக்கொண்டு அப்போதே போய்

விட்டிருப்பார்களே! நம்மைப் யிப்படிச் சிறைப்படுத்திக் கொண்டு வந்த இவர்கள் யார்? எங்கு கொண்டுவந்திருக்கிறார்கள்? ஏன் கொண்டுவந்தார்கள்? இதற்கு மூல புருஷர் யார்? என்ன செய்ய வெண்ணி யிருக்கிறார்கள்?" என்று எந்த வழியாய் யோசித்தாலும் அவர்களுக்கும் ஒன்றுமே புலப்படவில்லை யாதலால் அவர்களுக்குப் பெருந் திகிலா யிருந்தது. சாரதியும் ஆட்காரனும் திகிலால் தேகம் ஒடுங்கி பூனைகள் போல் ஒரு பக்கமாய்ப் பதுங்கிக் கொண்டார்கள்.

நால்வரும் அறையில் நிற்கும் கள்ளத் தலைவனையே யுற்றுப் பார்த்தார்கள். முன்னம் அவன் பேசிய மாதிரியால் அவன் கல்வி யறிவுடையவனென்றும் மேலான பதவியி லிருந்தவனென்றும் தெரிந்து கொண்டார்கள். அவன் உயரமானவன். இப்போது வெளிச்சத்தில் அவனை யுற்று நோக்கியதில் அவனுடைய மாதிரியால் முன் கருதியவைத்தும் சரியே யென்று தோன்றியது.

இளவரசன் அவனை நோக்கி "ஏனையா! இப்போதேனும் என்ன காரணத்திற்காக எங்களை யிங்கு கொண்டு வந்ததன் காரணம் இன்னதென்று தெரிவிக்கிறாயா" வென்றான்.

கள்ளர் தலைவன், "அய்யா நீர் முரட்டுத்தனமாய் பேசுவதால் ஒருபயனுமில்லை. இப்போது என்கையில் நீங்கள் பூரணமாய்ச் சிக்கிக்கொண் டிருக்கிறவரையில் நம்மிடம் சற்று மரியாதையாய்ப் பேசுவதே நலம். இப்போதும் நீங்கள் கைதிகளாகவும், நான் சிறைச்சாலை யதிகாரியாகவும் இருக்கிறோம் என்பதை யறிந்துநடங்கள். இப்போது இளவரசரே! நீர் நம்மோடுகூட தனியே வேறிடத்திற்கு வரவேண்டும். இப்பிரபுவும் மற்ற இருவரும் நீர் திரும்பி வருமட்டும் இங்கேயே பேசாம லிருக்கவேண்டும்" என்றான்.

இளவரசன்:—"நான் தனியே யுன்னோடு வந்தால் எனக்கு ஒரு ஆபத்தும் நேராதிருக்கும் என்பதற்கு என்ன உத்திரவாத மிருக்கிறது?" என்றான்.

கள்ளத்தலைவன் :—" என்ன உத்திரவாதமா? இதுகாறும் உன்னை ஒரு குண்டுவிட்டுக் கொல்லாமலிருந்தது எந்த உத்திரவாதத்தின்மேல், இப்போது இந்த நிமிடம் உங்கள் நால்வரையும் எந்த உத்தரவாதத்தின்மேல் கொல்லாம லிருக்கிறேன், அதே உத்தரவாதத்தின்மேல்" என்றான்.

இளவரசன் சற்று சிந்தித்து "ஆம், ஆம் நீ கூறுவது சரியே" என்று கூறிவிட்டுத் தன் மனதைத் தைரியம் செய்து கொண்டு "சரி அழைத்துப்போ. எங்கானாலும் சரி" என்றான்.

கள்ளன்:—"இதோ ஒரு விநாடி" என்று மொழிந்து விட்டு, சுகசிங்கம் பிரபுவை நோக்கி, "பிரபு நீரும் இந்த இரண்டு ஆட்களும் இளவரசர் வருமட்டும் இங்கே பத்திரமாய் இருக்கவேண்டும். தப்பித்துக் கொண்டு ஓடி விடலாம் என்று சொல்பப் பிரயத்தனம் செய்தீர்களோ அதே விநாடி தண்டனை யடைவது நிச்சயம். உங்கள் கண்களுக்கு ஒருவரும் புலப்படாவிட்டாலும் திரைக்குப் பின் போதுமான கண்கள் உங்கள் மேலேயே நாட்டத்தை வைத்திருக்கின்றன வென்பதை நன்று யறியுங்கள்" என்று கூறிவிட்டு அங்கிருந்த தீபத்தைக் கையிலெடுத்துக் கொண்டு இளவரசனை நோக்கி இனி நீர் வாரும் என்றழைத்துக்கொண்டு சுற்றியிருக்கும் திரைச் சீலையின் ஒரு பக்கத்தை நீக்கி வெளியி லழைத்துச் சென்றான்.

அவர்கள் சென்றதே அறை முழுதும் ஒரே இருளாய் விட்டது. சற்றுநேரம் சென்றதும், இருவர் காலடிகளும் போகப்போக தூரத்தில் கேட்டது; பிறகு நின்றுவிட்டது. இருக்குமிடமோ குகைபோல் நிர்ச் சந்தடியாய் ஏக இருட்டாயிருந்தது. நெஞ்சு நடுங்கிக்கொண் டிருந்தது. நடக்கும் விஷயம் இன்னதென்றாவது, தங்கள் முடிவு என்னமாய் முடியுமென்றாவது ஒன்றுமே தெரியாது. திப்பிரமை பிடித்தவர்கள்போல் பிரமித்திருந்தார்கள்.

கள்ளனும் இளவரசனும் திரைச்சீலையைவிட்டு வெளிப்பட்டதே பக்கத்தி லிருந்த படிகளின் வழியே மேலேறினார்கள். அங்கும் படிகளிலும் கைபிடிச் சுவரிலும் பக்கச் சுவரிலும் எங்கும் கறுப்புச் சீலையாகவே யிருப்பதைக் கண்ட இளவரசன் மனம் குன்றிவிட்டது. எங்கு பார்த்தாலும் மரணக் குறியாகவே யிருக்கிறது. இளவரசன் தைரியம் எங்கோ போய்விட்டது. தன்னை யொரு கொலைக்களத்திற்கு அழைத்துப் போவதுபோ லிருந்தது. அவன் கைகால்கள் நடுக்கங்கொண்டன. கால்கள் நடக்கத் தடுமாற்றமுற்றன.

இளவரசனை யழைத்துச் செல்லும் கள்ளத்தலைவன் "சாசாவென்று நடந்துவாரும்" என்றான்.

இளவரசன் என்னதான் மனம் பொறுத்துக்கொண் டிருந்தாலும் அவனால் முடியவில்லை. "நீ யென்னை யெங்குதான் அழைத்துக்கொண்டு போகிறாய்? சவச் சடங்கிற்கா அழைத்துக்கொண்டு போகிறாய்?" என்றான்.

கள்ளன் "அய்யா! நீர் வீண் கதைகளைப் பேசுவதில் ஒரு பயனுமில்லை. பேசாமல் நடந்துவாரும்" என்றான். இளவரசன் மறுபடி யொன்றும் பேசவில்லை. அவன் மனதில் உண்டான கலவரத்திற்கு ஒரு அளவில்லை. என்ன நினைப்பதென்று அவனுக்குப் புலப்படவில்லை. அதற்குள்

இருவரும் படிக்கட்டுகளைக் கடந்து மேல் தளத்திலுள்ள தாழ்வாரத்தை யடைந்தார்கள். அங்கும் அந்தக் கறுப்புச் சீலைகளே யெங்கு மிருப்பதைக் கண்ட இளவரசனுடைய ஆவி சோர்ந்துவிட்டது. அங்குள்ள சுவரிலும் அதே கறுப்புத் திரைச்சீலை விடப்பட்டிருந்தது. கள்ளன் சுவரின் ஒரு விடத்திலுள்ள திரைச்சீலையைக் காட்டி யிதன்பின் செல் என்றான்.

இளவரசனுக்கு அந்தரத்தி லிருப்பவன்போல் ஒரு விஷயமும் தெரியாவிடினும், "இனி என்ன யோசிப்பதிலும் ஒரு பயனுமில்லை. நாம் சொன்னதைச் செய்யமாட்டே னென்றாலும் பிரயோசனமில்லை. கடவுள் செயல் எப்படியாயினும் சரி" என்று தனக்குள் தீர்மானம் செய்துக் கொண்டு அத்திரையின்பின் சென்றான். அங்கொரு கதவிருந்தது. கள்ளன் பின்னாலேயே நின்று இளவரசனை நோக்கி,

"நீர் சற்றும் அதைரியப்படாமலும் உற்சாகத்தோடும் சந்தோஷத்தோடும் துணிகரமாய் இக்கதவைத் திறந்து கொண்டு அறைக்குள் செல்லும்" என்று தைரிய முண்டாகும் வண்ணம் கூறினான்.

இளவரசன் பார்த்தான். "இவ்வளவு தூரம்வந்துவிட்டபின் இனி எத்தகைய ஆபத்தாயினும் நாம் பின்னிடுவது வீணான கோழைத்தனமேயாகும். பிரயோசனமும் இல்லை. இவர்கள் யாரேனும் சரி இவர்கள் கையில் பூரணமாய்ச் சிக்கிக்கொண்டோம். இனி நமது பிரியப்படி நடக்கப்போகிறதில்லை" என்று மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு கதவைத் திறந்தான். உடனே அது கஷ்டமின்றி திறந்து கொண்டது.

—

7 - வது அத்தியாயம்.

கதவைத் திறந்ததே இளவரசனுக் குண்டான கண்காட்சி இன்னதென்று ஒருவர் கூறக்கூடியதல்ல. இதுகாறும் கொஞ்சநேரமாய்க் காரிருளில் மிக்க மனக்கலவரத்தோடிருந்தவன், கதவைத் திறந்ததே ஒரே ஜோதிமயம் கண்களுக்குத் தோன்றவே பிரமித்துவிட்டான். இரண்டொரு நிமிடங்கள் அச்சோதிமயம் தவிர வேறொன்றும் கண்களுக்குப் புலப்படவில்லை. தீபவெளிச்சம்மட்டும் தெரிந்ததேயன்றி அங்கு எவ்விதச் சந்தடியுமில்லை. சற்று நிதானமாய்ப் பார்த்தபோது அங்கு ஒரு உருவம் தோன்றியது. அவ்வுருவம் ஒரு ஸ்திரீயின் உருவம். அதன் அழகுகாண்போருளத்தை யதே விருடி கொள்ளை கொள்ளத் தக்கதாயிருந்ததென்று கூறலாமே யொழிய வேறுவிதமாய் விவரித்துக் கூற ஒருவராலும் சாத்தியப்பட்டதல்ல.

இளவரசன் மனதில் இதுகாறும் உண்டாயிருந்த கலவரமும், திகிலும், நடுக்கமும் அளவுகடந்தவையா யிருந்தாலும் அந்த அறைக்குள் நுழைந்த இரண்டொரு நிமிடங்களுக்குள் அவை யாவும் எப்படியோ மறக்கப்பட்டன. இப்போது அதியாச்சரியமும் சந்தோஷமும் அவன் மனதில் உண்டாய்விட்டன. அவன் அந்த ஸ்திரீயையும் அறையையும் உற்று நோக்கினன்.

அந்த அறை அலங்கரிக்கப்பட் டிருக்கும் விதத்தை நோக்கியபோது, இந்த்விடம் நாம் வசிக்கும் மண்ணுலகமாயிராது. இது தேவர் வாழும் விண்ணுடாகவே யிருக்க வேண்டுமென்று தோன்றியது. அங்கு சுவரோரங்களில் விடப்பட்டிருந்த திரைச்சீலைகள் பலநிற உயர்தரப்பட்டு

களில் பொற்சரிகையால் அழகிய உருவங்கள் பின்னப்பட்டவை. அறையிலுள்ள நாற்காலிகள் சோபாக்கள் யாவும் தந்தம் பொன் தகடு வெள்ளித் தகடு முதலியவைகளால் வேலே செய்யப்பட்டவை. அந்த அறையின் மத்தியில் சுவரோரத்தில் இருந்த ஒரு சோபாவின் மேல் அந்த ஸ்திரீ தன் வலது கரத்தைத் தலையின்கீழ் வைத்துக்கொண்டு நிம்மதியாய் சாய்ந்துகொண் டிருக்கிருள்.

அவள் உடை கீழ்நாட்டு உயர்ந்த அந்தஸ்தைச் சேர்ந்த சீமாட்டிகள் அணியும் உடைகள்போ லிருந்தது. அவள் உருவத்தின் இலட்சணத்தைக் கவனித்தால் இவ்வுலக மாதென்று கூறுவதற்கில்லை. அவள் சாயலே காண்போர் உள்ளத்தை யுடனே அடியோடு கவர்ந்துகொள்ளத் தக்கதா யிருந்தது. இளவரசன் எத்தனையோ அழகிய மாதர்களைக் கண்டிருப்பினும் இந்த வுருவத்தைப்போல் அவன் ஒரு போதும் கண்டதில்லைபோல் இருந்தது. அவள் தேகத்தில் அணிந்திருந்த விலையுயர்ந்த முகம்மல் உடை அவளுடைய அங்கங்களின் பிரமிக்கத்தக்க அமைப்பை நன்கு புலப்படக் காட்டிற்று.

இளவரசன் சில நிமிடங்கள் உலகுமுழுமையும் மறந்து, சற்றுநேரத்திற்குமுன் தான் அனுபவித்த திகிலையும் மனக் குழப்பத்தையும் அடியோடு மறந்து தன்னையும் தானே மறந்து நட்டமரம்போல் அசைவின்றி பிரமித்து நின்றுவிட்டான். பலதரம் இது கனவோ உண்மையோ, நாம் கனவு தான் கண்டுகொண் டிருக்கிறேமோ யென்று விழித்துப் பார்த்தான். தன்தேகத்தைத் தானே தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கொண்டான். அந்த ஸ்திரீயோ அதுவரையில் இவன் அங்கு நிற்பதைக் காணுதவள்போலும், தான் ஏதோ ஓய்ந்து நிம்மதியா யுட்கார்ந்து ஏதோ ஆழ்ந்த சிந்தனையி

விருப்பவள்போலு மிருந்தாள். கடைசியில் தன் தலையைத் திருப்பி திடுக்கிட்டு நோக்கினுள்.

இளவரசன்:—"ஓ அழகே யுருவா யமைந்த மாதரசியே! நீ யாரோ?" வென்று கூறிக்கொண்டே அவளருகில் மெதுவாய்ச் சென்முள்.

அம்மாது ஆசனத்தைவிட் டெழுந்து மயில்போல் நடந்து அவன் எதிரில் வந்தாள். இப்போது அம்மாதை யருகில் பார்த்த இளவரசன் மனம் கரைந்துவிட்டது. தெய்வலோக மாதரைக் கண்டவன்போல் பேரானந்த மடைந்தான். எதிரில் வந்த அம்மாது மிக்க நாணயத்தோடு வந்தன மளித்து அவனை யழைத்துக்கொண்டு போய் ஆசனத்தி லிருக்கவைத்து தானும் உட்கார்ந்தாள். இளவரசன் அவள் பேரழகைக் கண்டு இவள் எந்தநாட்டுக் கன்னிகையோ, என்று பிரமையோடு பார்த்துக்கொண்டிருந்தான்.

அம்மாது யாழையும் பழிக்கும் தன் இனிய குரலால் "மகாராஜா அவர்கள் என்னை யார் என்று கேட்டீர்கள். அது நான் கூறக்கூடாத இரகசியம்" என்முள்.

இளவர:—தேவர்களைப்போல் அழகுவாய்ந்த இத்தகைய சீமாட்டி துஷ்டர்களாகிய முரடர் கூட்டத்தோடு சம்பந்தப்பட் டிருக்கமாட்டா ளென்றே நம்புகிறேன். ஆகையால் என்னை யிங்கு கொண்டுவந்த அத்துஷ்டர்கள் யாரோ—ஏன் இப்படிச் செய்தார்களோ எனக்கு விளங்கவில்லை" என்முன்.

அம்மாது "தாங்கள் இக்குற்றத்தைத் தயவுசெய்து மன்னிக்கவேண்டும்" என்முள்.

இளவர:—"நான் உனக்காக எத்தகைய குற்றமாயினும் மன்னித்துவிட ஆயத்தமா யிருக்கிறேன். ஆனல்

என்னை யுன்னிடம் அழைத்துவா இம்மாதிரி யேற்பாடு செய்வானேன்'' என்பதே.

அம்மாது மிக்க நாணத்தோடும் ஆளை வசீகரிக்கத்தக்க மாயஜாலமான கண்பார்வையோடும், தலை குனிந்த புன்னகையோடும் "ஏனெனில்......ஏனெனில் .....தங்கள்...... தங்கள்மேல் காதல் கொண்டதால்'' என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே இளவரசன் பேரானந்தமடைந்து தன்னை மறந்து காமக் கள்ளின் வெறி மண்டைக் கேறியவனாய் அவளை யாலிங்கனம் செய்துகொண்டான். இப்போது இளவரசன் மனோநிலைமை முழுதும் மயக்கத்திலாழ்ந்து எதிரியின் வசத்ததாய்விட்டது. இச்சமயம் அவன் தன் வசமே யிழந்தவனாய் விட்டான்.

"ஆ! நீ என்மேல் காதல் கொண்டதாய்க் கூறினாயல்லவா?'' என்றான்.

அம்மாது:—"ஆம்; உண்மையே கூறினேன். நான் கூறுவதைச் சற்று பொறுமையாய்க் கேளும். பிறகு...... பிறகு......'' என்றாள்.

இளவரசன் பின்னும் பேரானந்த மடைந்தவனாய், "ஆ! நீ என் சொந்தநாயகியாய் விடுவாய். என் சொந்தநாயகியாய்விடுவாய்'' என்று வெறியேறினவன்போல் கூவினான்.

அம்:—"ஆம் முழுதும் உன்னுடையதே'' யென்றாள்.

இள:—"ஹா! அப்படியாயின் நீ உன் பிரியத்தைக் கூறு. நான் ஆனந்த சுகத்தை யனுபவிக்கும் காலம் அனாவசியமாய் ஆலசியப்படவேண்டாம்.'' என்றான்.

அம்:—"நான் தங்கள்மேல் காதல்கொண் டிருப்பதாய்க் கூறினேனல்லவா. என் மனதிலிருந்த உண்மையையே கூறினேன். நான் ஆங்கிலத்தத்தைக்கும் கீழ்நாடாகிய

பாரசிகத்தாய்க்கும் பிறந்தவளானபடியால் என்புத்தி, பழக்க வழக்கங்கள், பாஷை முதலிய யாவும் உங்கள் நாட்டுடையதாகவே யிருக்கின்றன. ஆனால் என்னுடைய ஆசாபாசங்கள் கிழக்கு நாட்டாருடையவை போன் றிருக்கின்றன. ஆகையால் நான் தங்களுடைய குண விசேஷங்களைப் பற்றியும், கீர்த்தியைப் பற்றியும், அன்புநிறைந்த தயாளகுணத்தையும் பற்றி கேள்விப் பட்டதால் தங்கள் மேல் எனக்கு அண்புண்டாயிற்று. பிறகு தெய்வகதியாய் ஒருநாள் தங்கள் புகைப்படத் தைக் கண்டேன். உடனே தங்கள் மேல் அடங்காக் காதல் கொண்டேன். நான் இங்கு வருவதற்கு காரணம் அதுவே" என்ருள்.

இள:--"ஆ! இதுமட்டும் உண்மையாயின்..." என்ருன். அம்மொழிகளைக் கேட்டதே யம்மாது மிக்க மன வருத்த மடைந்து,

"அந்தோ! உண்மையா யிருந்தாலா! ஓ கடவுளே! கடைசியில் என்மொழிகள் நம்பிக்கையில்லாமலா போய் விட்டன? கடவுளே! நான் காதல்கொண்டு, அதனுல் என் ஜன்மபூமியையும், சுற்றத்தாரையும் யாவரையும் கைவிட்டு விட்டு இங்கு நம்பிவந்தது கடைசியில் இலவுகாத்தக் கிள்ளை போலவா ஆய்விட்டது. அய்யோ நான் என்ன புத்தி கெட்டுப் போய்விட்டேன். புருடர்களைக் கண்மூடித்தன மாய் நம்பக்கூடாதென்கிருர்களே அது சரியாய்ப் போய் விட்டதே. நான் சுத்த முட்டாளாய்ப் போய்விட்டேனே. இக்காதலால் என் பிராணனே போய்விட்டாலும் போகிற தென்று என் தாய் நாட்டிலேயே யிருந்துவிட்டாலும் பிரா ணன் போகுமே யொழிய இப்படி அலட்சியமாகவும் அவ நம்பகமாகவும் நடத்தப்படமாட்டேனே. அந்தோ! தெய்

வமே!! நான் ஆனந்தக் கடலில் குளிப்பேனென்று நம்பி வந்தது கடைசியில் துக்கக்கடலாய் முடிந்ததே...'' என்று பிரலாபிக்கலானாள்.

இம்மொழிகளைக் கேட்டதே இளவரசன் தான் தேவ லோகத்திலேயே யிருப்பவன்போல் நினைத்துக்கொண்டான். அவன் மனம் பெரிய குற்றம் செய்தவன்போ லாய்விட் டது. மனநடுக்கத்தோடும் மிக்க ஆத்திரத்தோடும்,

"ஓ! என் அருமைக் கண்மணியே. நான் பெரிய அப சாரம் செய்துவிட்டேன். நான் வேண்டுமென்று உன் சொற்களை நம்பாததாய்க் கூறவில்லை. வீணாய் உன் மன திற்கு வியாகூலத்தை யுண்டாக்கிவிட்டேன். என் முட் டாள் தனமான மொழிகளை யுடனே மறந்துவிடு. என் உண்மையை யெவ்விதமாய்ச் சோதித்தாலும் சோதித்துக் கொள்'' என்று கூறிக்கொண்டு, அவளை யாலிங்கனம் செய்துகொள்ள அருகிற் சென்றான்.

அம்மாது:—''இப்போதல்ல இப்போதல்ல;பொறுங்கள். இப் போதாவது நான் கூறிய மொழிகளை நம்புகிறீர்களா?'' என்றாள்.

மாய ஜாலங்கற்று தன்னுள் ஒரு காரியத்தை நிறை வேற்ற வேண்டுமென்ற தீர்மானங்கொண்டு நடக்கும் ஒரு ஸ்திரீயின் முன் காமப்பேய் பிடித்துக் காலமுழுதும் ஸ்திரீ லோலனாய்த் திரியும் ஒரு காமுகன் நல்லது கெட்டதென் பதை யுணராமல் அவளுடைய அடிமைபோல் அவள் சொல்லுகிறபடி யெல்லாம் நடப்பது ஓர் அதிசயமல்ல. இவ் வாறு ஸ்திரீகளால் கெட்டவர்கள் எத்தனையோ பேர்.

இளவாசனுக்கு பித்தேறவேற அம்மாதைத் தோத்தி ரம் செய்யத்தொடங்கினான். அவளும் வெண்ணெ யருகில்

அனல் காட்டுவதுபோல் அவன் மனங்கரையச் செய்து சமயம் பார்த்து திடீரென்று அழத்தொடங்கினுள்.

அவளுடைய அடக்கமுடியாத துயரத்தை இளமன்னன் பின்னும் மனமிளகி, "ஓ என் காதலியே உனக்கு இப்படிப்பட்ட துயரம்வரக் காரணமேன்? நீ துயரப்படுவதைக் கண்டு என் மனம் சகிக்கவில்லை. அப்படிப்பட்ட குறையேதேனு முண்டோ?" என்று வேண்டிக்கொண்டான்.

அம்மாது:—"அந்தோ திடீலென்று ஒரு விஷயம் என் மனதில் உதித்தது. அதனுல்தான் இத்துயரம் உண்டாயிற்று" என்ருள்.

இளவரசன்:—ஆ! அதென்ன குறை. நான் இருக்கையில் உனக்கு எவ்விதக் குறையுமிருக்காது. அது என்னுல் ஆகக்கூடிய காரியந்தானே?

அம்மாது மிக்க ஆவலோடு "ஆம் ஆம் முழுதும் தங்களாலேயே ஆகக்கூடிய வேலை. ஆ! அதைமட்டும் நிறைவேற்றிவிட்டால்..."

இளவரசன்:—அப்படியாயின் அது எதுவாயினும் சரி. ஒழிந்து போனதாகவே மதித்துக்கொள். உடனே அதன் விபரத்தைக் கூறு.

அம்மாது:—ஆ இப்போதுதான் நான் கேள்விப்பட்ட தங்களுடைய உதார குணத்தைப் பிரத்யக்ஷமாய்க் காணப் போகிறேன். என் நெறுங்கிய சுற்றத்தார் ஒருவர் என் மேல் பூர்ண அன்புடையவர். அப்படிப்பட்ட உத்தமர் - ஏதோ கெட்ட காலத்தால் தங்கள் கோபத்திற்கு ஆளாய் விட்டார். அவரைமட்டும் மன்னித்து விட்டால்......

இளவரசன் :—இவ்வளவு தானே. அப்படியே செய்கி றேன்.

அம்மாது பின்னும் அவனை மயக்கத்தக்க வார்த்தை களால் உற்சாகப்படுத்தி :"ஓ என் காதலரே ! அது எங்கோம் பிடிக்கும் இதோ கடிதம் பேனு இங்கி முதலிய யாவும் ஆயத்தமா யிருக்கின்றன. இரண்டு வரி எழுதி விடுங்கள். உடனே என் சந்தோஷம் துயரக் கலப்பில்லாததாய் விடும்" என்று எழுந்து அங்கிருந்த மேஜையைத் திறந்து எழுது கரு விகளைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

இளவாசன் நாம் இன்னது செய்கிறே மென்பதை யுணராது "அவர் பெயரென்ன?" வென்றான்.

அம்மாது :—"என் காதலரே! பெயருக்கு மட்டும் இடம் விட்டு விடுங்கள் அதை நான் எழுதிக்கொள்கிறேன்" என்றாள்.

இளவாசன் அவ்வாறே யெழுதிக் கையொப்பமிட்டுத் தன் கணையாழி முத்திரை பதித்துக் கொடுத்துவிட்டான்.

———

8 - வது அத்தியாயம்.

இப்போது நாம் இருட்டறையில் விட்டுவந்த சுகசிங்கம் பிரபுவும் இரண்டு ஆட்களும் எந்த நிலைமையிலிருக்கிறார்களென்று கவனிப்போம். அவர்களிருக்கும் அறையோ காரிருள் சூழ்ந்திருக்கிறது. நாற்புறமும் கறுமையான திரைச்சீலைகள் விடப்பட்டிருப்பதால் வெளியிலுள்ள சொல்ப வெளிச்சங்கூட உள்ளே நுழைவதற்கில்லை. அதோடு பூரண நிர்ச்சந்தடியாயிருக்கிறது. இடமோ இன்ன விடமென்று தெரியாது. நகரத்தில் எந்தப் பாகத்திலிருக்கிறதென்றும் தெரியாது. இளவரசனை யழைத்துச் சென்றவர்கள் இன்ன காரியத்திற்காக அழைத்துச் சென்றார்களென்று இவர்க ளறியார்கள். ஆதலால் அது விஷயத்தில் இவர்களுக்குப் பெருந்திகி லுண்டாய்விடவே, 'அந்தோ நமது கதி யென்னமோ! நாம் வீடுபோய்ச் சேருவோமோ இல்லையோ'' என்று பெருங் கலவரமும் திகிலுங் கொண்டவர்களாய் ஆவிசோர்ந் திருக்கிறார்கள். ஒருவரோடொருவர் பேசலாமென்றால் மறைவிடங்களில் காவலாட்கள் இருக்கிறார்களென்ற பயம்.

இவர்க ளிவ்வாறு பெருங்குழப்பத்தி லிருக்கும்போது ஒருபக்கம் திரை நீக்கப்பட்டதும் கள்ளர் தலைவன் கையில் பிடித்த இராந்தலோடு அறைக்குள் வந்தான். அவன் பின்னால் முகமூடி யணிந்த இன்னொரு ஆள் இருந்தான். அவன் இரு கரங்களிலும் இரண்டு கைத்துப்பாக்கிகள் இருந்தன. அவன் முதலிலிருந்தே அங்கு காவலாய் நின்றிருந்தான் என்று தோன்றியது. இதை யுணர்ந்ததே "ஆகா நாம் ஒன்றும் பேசாம லிருந்ததே நல்லகால மாயிற்று" என்று

சிறையிலிருக்கும் மூவரும் மனதி லெண்ணிக்கொண் டார்கள்.

கள்ளர் தலைவன் திரும்பி வந்தவன் இளவரசனைக் கூட அழைத்து வாராமற் போகவே பிரபு முதலியவர்களுக்குப் பெருந்திகில் உண்டாய்விட்டது. பிரபு தன் மனதைத் தைரி யப்படுத்திக் கொண்டு கள்ளர் தலைவனை நோக்கி,

"இளவரசர் எங்கே? பத்திரவம் அவர் உங்களுடைய இராஜன் குமாரர் என்று நினைப்பிருக்கட்டும்" என்றார்.

கள்ளன்:—அவர் இராஜன் குமாரர் என்பதைப்பற்றி நமக்கு ஒரு துரும்பளவுக்கூட இலட்சியமில்லை. ஆனால் பிர புவே! அவரைப்பற்றி தங்களுக்கு மனதில் கலவரம் வேண்டாம். அவர் நிம்மதியாகவும் இன்னும் மிக்க சந் தோஷமாகவே யிருக்கிறார். அதைப்பற்றி கலவரம் வேண்டாம்.

பிரபு:—அவர் எங்களிடம் வந்துசேர இன்னும் எந்நேரம் செல்லும்?

கள்:—"தங்கள் கெடியாரத்தை யெடுத்து இப்போது மணி யென்னவென்று கொஞ்சம் பாருங்கள்" என்று கூறிக் கொண்டே இராந்தலோடு அவர் அருகில் வந்து நின்றான்.

பிரபு தன் உட்சட்டைச் சேபியிலிருந்த இரத்னங்கள் இழைக்கப்பட்ட தங்கக் கெடியாரத்தை யெடுத்து மணி பார்த்து, "மணி இரண்டடிக்க இன்னும் ஐந்து நிமிடங்கள் இருக்கின்றன" என்றார்.

கள்:—"பிரபுவே! தாங்கள் சந்தோஷத்தோடு இதை நமக் குப் பரிசா யளித்துவிடுங்கள்" என்றான்.

இதைக்கேட்ட பிரபு திடுக்கிட்டு "ஹா! நீங்கள் கடைசியில் வழிபறி கொள்ளைக்காரர் தானா! நான்....நான் என்னமோ நினைத்துக்கொண் டிருந்தேனே" என்றார்.

கள்:—வேறென்னவென்று எண்ணிக்கொண் டிருந்தீர்கள்.

பிரபு:—மற்றொன்றுமில்லை. எங்களை வழிமறித்தீர்களே யந்த ஸ்தலத்திலேயே களவாடாமல் இங்கு இப்படி மிக்க அதிசயமான மர்மத்தோடு கொண்டுவந்தபடியால், நீங்கள் ஏதோ வேறுவிஷயமாக இப்படிச் செய்கிறீர்களென்று நினைத்தேன்.

கள்:—"நாங்கள் இரண்டு மூன்று வேலைகளைக்கூட கலந்து செய்வது வழக்கம்" என்று கூறிவிட்டுத் தன் பக்கத்திலிருக்கும் இன்னொரு கள்ளனைநோக்கி, "என் தானவா நான் கூறுவதென்ன உண்மைதானே?" என்றான். அதற்கவன் "சந்தேகமில்லாமல்" என்று மறுமொழியளித்தான்.

கள்ளர் தலைவன் பின்னும் பிரபுவை நோக்கி, "பிரபுவே! நாங்கள் அறை குறையாய் எந்த வேலையும் செய்வதில்லை. ஏதோ தங்கள் கழுத்திலிருக்கும் தங்கக் கெடியாரச் சங்கிலி, விரல்களிலுள்ள மோதிரங்கள் யாவும் கழற்றிக்கொடுங்கள்" என்றான்.

பிரபு என்ன செய்வார் பாபம். கள்ளர் கையில் பூராய் சிக்கிக்கொண் டிருக்கிறோமென்று தெரியும். பேசாமல் அப்படியே யாவும் கழற்றிக் கொடுத்துவிட்டார்.

கள்ளருக்கு அவற்றை யளித்ததால் அவருக்குப் பொருள் போய்விடுகிறதே யென்ற வருத்தம் சற்றுமில்லை. அவருடைய திரண்ட செல்வத்திற்கு அதுவொரு இலட்சிய

மல்ல. இவர்கள் கள்ளர் என்று தெரிந்ததே அவருக்கு மிக்க ஆச்சரியமும் அச்சமு முண்டாய்விட்டது.

கள்ளர் தலைவன் மோதிரங்கள் கெடியாரம் சங்கிலி முதலியவற்றை வாங்கிக்கொண்டபின் "பிரபுவே! பணப்பையை யெடுங்கள்!" என்றான்.

பிரபு பேசாமல் எடுத்துக் கொடுத்துவிட்டார். கள்ளன் அதை வாங்கிப் பார்த்து அதிலுள்ள பணத்தைக் கையில் கொட்டிப் பார்த்து,

"சேசே! இதென்ன வெட்கக்கேடு; உம்முடைய அந்தஸ்திற்கும் உமக்கிருக்கும் செல்வத்திற்கும் இந்த மூன்று பவுன்கள் தானா பையில் வைத்திருப்பது. உண்மையாகவே இது மிக்க மானக்குறைவு" என்று கூறிவிட்டு,

"கிடக்கிறது கைப்புத்தகம் இருக்கும் அதை யெடு பார்ப்போம்" என்றான்.

பிரபு அவ்வாறே தன் சிறு புத்தகத்தை யெடுத்து "இந்தா இதில் ஒன்றிரண்டு நோட்டுகளிருந்தால் மகாராஜனாய் எடுத்துக்கொள். ஆனால் ஏதாவது இரகசியக் கடிதங்கள் இருந்தால்——" என்றார்.

கள்:—"தடையின்றி இருக்கின்றன. பிரபுவே! இப்புத்தகத்தை யிப்படியே யும்மிடம் கொடுத்து விடுவதாயின் என்ன கொடுப்பீர்?" என்றான்.

பிரபு:—"உடனே அதை யென்னிடத்தில் கொடுத்துவிடு. நாளை நீ யாரிடம் கொடுக்கச் சொல்லுகிறாயோ அவர்களிடம் ஆயிரம் பவுன்கள் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

அம்மொழிகளைக் கேட்ட கள்ளன் முகமலர்ச்சியடைந்து,

"ஆ! பிரபுவே தாங்கள் கூறியபடி இப்புத்தகம் ஆயிரம் பவுன் மதிப்புள்ளதாகிறது. ஆனால் மதிப்புத்தொகை முழுமையும் நீர் கொடுக்கிறதென்றால் வியப்பாகவே யிருக்கிறது. இன்னும் அதிகமாய்ப் பெறுமானால் தான் அவ்வளவு கொடுப்பதாய்ச் சம்மதிப்பீர். ஆகையால் பிரபுவே "இரண்டாயிரம் சவரன்கள் கொடுத்துவிடுங்கள்" என்றான்.

பிரபு:—என்ன? இரண்டாயிரமா? இந்தப் புத்தகத்திற்கா இரண்டாயிரம் பவுன் ? ஆ! ஆயினும் ஒழியட்டும். உடனே அதைக் கொடுத்துவிடு. அப்படியே இரண்டாயிரமே கொடுத்து விடுகிறேன்.

கள்:—ஆனால் அந்த ரொக்கத்தொகை என் கைக்கு வந்த பிறகே நான் இதைக் கொடுப்பேன்.

பிரபு:—என் வார்த்தையை நம்பமாட்டாயா? நாளைக்கு நீ யுன் ஆட்களில் யாரையேனும் அனுப்பு அவர்களிடம் இரண்டாயிரம் சவரன்களையும் கொடுத்து விடுகிறேன்.

கள்:—"ஆம் ஆம் அதோடு கூட நான் அனுப்பும் ஆளைப் பிடித்துக்கொள்ள அல்லது பின் தொடர்ந்து வர ஒரு செந்தலைப் புலியையும் அனுப்புவீர். பிரபுவே அந்த வித்தையெல்லாம் என்னிடம் பலிக்காது. ஏ! தானவா! ஒரு கடிதமும் அரக்கும் கொண்டுவா" என்றான். தானவன் அவ்வாறே சென்றான்.

பிரபு மனத்துயரோடு முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்தார். மற்ற இருவரும் திகிலோடு ஒருவர் முகத்தை யொருவர் மிரள மிரளப் பார்த்துக்கொண்டார்கள்.

அதற்குள் கடிதத்திற்குப் போனவன் யாவும் எடுத்துக்கொண்டு திரும்பி வந்தான்.

கள்ளன் "பிரபுவே! இதோ இக்கடிதத்தில் உமது சிறு புத்தகத்தைச் சுற்றி உமது மோதிரத்தால் சீல் போடும். அந்த சீல் குலையாமல் நாளைக்கு இது வந்து தங்களிடம் சேர்ந்தால் தங்களுக்குத் திருப்தியா யிருக்கும்." என்று கூறிக்கொண்டே தான் கூறியபடி புத்தகத்தைச் சீல் செய்துவிட்டான்.

பிரபு அவனை நோக்கி "எல்லாம் சரிதான். நாளைக்கு இது வந்து என்னிடம் சேர்வதெப்படி? பணம் உன்னிடம் வந்து சேர்வதெப்படி?" என்றார்.

கள்ளன்:—"தாங்கள் புதவாரம் முழுதும் வீட்டிலேயே யிருங்கள். மற்ற விஷயங்களைப்பற்றி தங்களுக்குக் கவலையே வேண்டாம்" என்றான்.

பிரபு:—"ஆ! அப்படியே யாகட்டும்" என்றார்.

அவர் மதனவல்லியைக் காணவேண்டிய முறை வெள்ளிக்கிழமை யாதலால் அதைவிட்டு புதன்கிழமை யென்று கள்ளன் கூறியதற்கு உள்ளத்தில் மகிழ்ச்சி யடைந்தார்.

கள்ளன் வேலைக்காரரைச் சட்டைசெய்து அவர்களருகில் செல்லவேயில்லை யாதலால் அவர்கள் சற்று நிம்மதி யடைந்தார்கள். அச்சமயம் உள்ளிருந்து மணியடிக்கும் சத்தம் கேட்டது. கள்ளன் நீங்கள் செல்லவேண்டிய வேளை நெருங்கிவிட்டது என்று பிரபுவிடம் கூறிவிட்டு இராந்தலை யெடுத்துக்கொண்டு சென்றான்.

ஐந்து நிமிடங்கள் கழிந்ததும் கள்ளர் தலைவன் இளவாசனை யழைத்துக்கொண்டு அறைக்குள் வந்தான்.

இளவரசன் திரும்பிவந்ததைக் கண்ட பிரபுவும் வேலைக்காரரும் சந்தோஷமடைந்தார்கள். கள்ளன் உடனே யவர்

களை யழைத்துக்கொண்டு போய் வண்டியில் ஏற்றினன். முன்பு வரும்போது எப்படி வந்தார்களோ அவ்வாறே புறப் பட்டார்கள். வண்டியில் யாவரும் ஏறிக்கொண்டதே முன் போலவே பின்னல் ஐந்துபேர் குதிரைமேல் வந்தார்கள். வண்டியின் சாளரங்கள் மூடப்பட்டன. சுமார் அரைமணி நேரம் சென்றதும் வண்டி நிறுத்தப்பட்டது.

கள்ளர் தலைவன் முன்னடி வண்டியினின்று இறங்கிய தும் சாளரங்களைத் திறந்தான். இளவரசனும் பிரபுவும் பார்த்தார்கள். முதலில் வண்டி யெங்கு மடக்கப்பட்டதோ அதேவிடத்தில் இப்போதிருந்தது. கள்ளர்கள் முன்போல் வேலைக்காரரை வண்டியின் மேல் பரப்பில் ஏற்றிவிட்டு இள வரசனுக்கும் பிரபுவுக்கும் வந்தன மளித்துவிட்டு மாயமாய்ப் போய்விட்டார்கள்.

அவர்கள் செல்லுமட்டும் இவர்கள் ஒருவரோடொரு வர் ஒன்றும் பேசாமல் மௌனமாய் இருந்தார்கள். வண்டி இரத்னபுரியை நோக்கிப் புறப்பட்டது. பிரபு தங்கள் வரை யில் நடந்த சங்கதிகளை முதலில் கூறினர். அவர்கள் கொள்ளை யடித்தார்கள் என்று கேட்டதே இளவரசன் மிக்க வியப்படைந்தான். அதோடு அவன் மனதில் பெரிய கலவரமுண்டாய்விட்டது. அந்த ஸ்திரீயின் விஷயத்தில் பெரிய சந்தேக முண்டாய்விட்டது. ஏனெனில் இத்தகைய துஷ்டர்களோடு சம்பந்தப்பட்டவளுடைய வார்த்தைகள் நம்பத்தக்கனவா அல்லது அவள் வார்த்தைகளெல்லாம் வஞ்சக வார்த்தைகளோ, நாம் அடியோடு மோசம் போய் விட்டோமே. இதனல் என்ன கெடுதி நேரிடுமோ'' வென்று பெரிய கலவர முண்டாய்விட்டது. தன் மனதில் உண்டா யிருந்த உற்சாகமும் சந்தோஷமும் மங்கிவிட்டது. "அவள் தான் நெடுந்தூரமுள்ள கீழ் நாட்டிலிருந்து தன்மேல் காதல்

கொண்டு வந்ததாய்க் கூறியதும்,காதல் கொண்டவள் போல் நடித்ததும் யாவும் பொய்யாயின் நம்மை யேமாற்றி ஏதோ ஒரு காரியத்தைச் சாதித்துக்கொண்டு போகக் கருதியே வந்தவளா யிருக்கவேண்டும்; அப்படியாயின் நாம் எந்த விஷயத்தில் மோசம் போய்விட்டோமோ" என்று பெரிய மனக் குழப்ப முண்டாயிற்று.

அப்படி யிருந்தும் தனக்கும் அம்மாதிற்கும் நடந்த சங்கதி நடந்தபடியே யாவும் பிரபுவினிடம் கூறினன்.

பிரபு யாவற்றையும், முக்கியமாய் அவள் தன் காதலைக் காட்டிய விஷயத்தைப்பற்றி மிக்க கவனமாய்க் கேட்டார். யாவும் கேட்டபின் "கடைசியில் என்ன ஏற்பாடோடு திரும்பினீர்கள்" என்ருர்.

இள:—"அந்தோ! நான் அடியோடு மயங்கிப்போய் விட்டேன். ஆயினும் அவள் யாராயினும் சரி. காதலிக்கத் தகுந்தவளே. நான் கடைசியில் முக்கியமாய் அறிய வேண்டிய விஷயங்களைக் கேட்டுணர மறந்துவிட்டேன். அதாவது அவள் யார்? எந்த ஊர்? பெயரென்ன? நான் யாரை மன்னித்துவிட்டேன்? இந்த விஷயங்கள் ஒன்றையுமே யறிந்துகொள்ளாமல் மயங்கி விட்டேன். ஆனல் நான் கேட்டாலும் அதை யறிந்து கொள்ள முடியாது. மணி 3 அடித்தது. உடனே அவள் தட்டென் றெழுந்து இனி ஒரு விநுடிகூட இருக்கலாகாது உடனே புறப்படும் என்ருள். நான் ஒன்றும் பேசுவதற்கில்லை."

பிரபு:—"இனி சந்திப்பதைப்பற்றிக் கூட கேட்கவில்லையோ?" என்ருர்.

இள:—ஆ! அதைப்பற்றி கேட்டதற்கு மறுபடி பார்க்கப் பிரிய முள்ளவளைப்போலவே தானே யெனக்குக் கடிதம் எழுதுவதாய்க் கூறினள்.

பிரபு:—தாங்கள் எழுதிக் கொடுத்த பத்திரம்?

இள:—ஆ! அந்த விஷயந்தான் என் மனதைச் சற்று வருத்துகிறது. எப்படியோ யென்னை யறியாமல் எழுதிவிட்டேன். ஆனால் அதன் மூலமாய் ஆள் யாரென்பதை யறியலாம். ஏனெனில் அது ஒருவனை மன்னித்துவிட்டதாய் எழுதிய பத்திரம். ஆகையால் அவன் எப்படியாவது வெளிவரவேண்டியதே. அது யார் அப்படி என் கோபத்திற்கு ஆளாகி மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டுமென்று இவ்வளவு ஆவலா யிருக்கிறவன் என்பது எனக்குத் தெரியவில்லை.

பிரபு:--தாங்கள் அப்பத்திரத்தில் எம்மாதிரி கையொப்ப மிட்டீர், சாதாரண மனிதராகவா அல்லது இளவரசர் என்ற அதிகார தோரணையாகவா?

இளவ:—அதிகார தோரணையாகத்தா னிருக்கும். நீ கேட் கிறமாதிரியைப் பார்த்தால் நான் பெரிய முட்டாள் தனமே செய்துவிட்டேன். ஆயினும் நடந்தது நடந்து விட்டது இனி யதைப்பற்றி பேசுவதில் பயனில்லை.

பிரபு:—இந்த விஷயத்தை முழுதும் எப்படியேனும் கண்டு பிடிக்கவேண்டுமென்று தங்களுக்கு விருப்ப மிருக்கி றதோ? அல்லது அம்மாது கடிதம் எழுதுகிறாளா வென்று கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம் என்று எண்ண மிருக்கிறதா?

இள:—இதைக் கண்டுபிடிக்க ஏதாவது வழியிருக்கிறதா? ஆனால் சங்கதி வெளிவரக் கூடாது. வெளிவந்தால் நமது நண்பர்கள் நம்மைக் கேலி செய்வார்கள்.

பிரபு:—தாங்க ளிதில் சம்பந்தப்பட் டிருப்பதால் தங்கள் பெயர் வெளிவராம லிருப்பதற்காக இச்சங்கதியை

யடிபோடு மறைத்துவிட வேண்டுமென்று எனக்குத் தெரியும். ஆயினும் இரகசியமாகவே இதைக் கண்டறிய வேண்டுமென்பது என் விருப்பம்.

இள:—அவள் யாராயினும் சரி. மறுபடி யவளைக் கண்டு பிடிக்கவேண்டு மென்பதே என் பிரியம். ஆனால் சங்கதி வெளிவரலாகாது.

பிரபு:—புதவாரம் இரண்டாயிரம் சவானுக்காக ஆள் வருமல்லவா. அச்சமயம் மிக்க சாமர்த்தியவானாகிய ஒரு துப்பறிபவனை வீதியில் இருக்கச்செய்து அம்மனிதன் வந்து செல்லும்போது அவன் பின்னால் சென்று இருப்பிடத்தைக் கண்டறியச் செய்யத் தீர்மானித்திருக்கிறேன்.

இள:—துப்பறிபவனிடம் சமாசாரங்களைக் கூறும்போது என் பெயரை மறந்தேனும் வெளியிட்டுவிடப் போகிறாய்; பத்திரம் பத்திரம்.

பிரபு:—அவ்விஷயத்தைப்பற்றி தாங்கள் எள்ளளவும் சந்தேகங்கொள்ள வேண்டாம்.

இள:—பிரபுவே! இன்னொரு விஷயம்; அதாவது உம்மைப் பூர்ணமாய் நம்பி இவ்விஷயத்தைக் கண்டு பிடிக்கச் சம்மதித்தேன். அம்மாதின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்தபிறகு தாங்கள் அவ்விஷயத்தில் சற்றும் பிரவேசிக்கலாகாது.

பிரபு:—அது விஷயத்தில் நான் சற்றும் பிரவேசிப்பதில்லையென்று சத்தியம் செய்கிறேன். ஆனால் தங்கள் உள்ளத்தில் இந்த அபூர்வக் கன்னிகையின் உருவம் நிறைந்துபோ யிருப்பதால் மதனவல்லியின் உருவத்திற்குச் சற்றும் இடமிராதென்று நினைக்கிறேன்.

இள:—நானும் உண்மையாகவே அப்படித்தான் நினைக்கிறேன். ஆனால் அந்த விஷயத்தில் ஆறு பேர் பந்தயம் போட்டுக்கொண்டிருப்பதும், ஜெயமடைந்தவன் ஆறுயிரம் பவுன் பரிசுபெறுவதும் இல்லாவிட்டால்...

பிரபு:—அப்படியானால் அச்சம்பந்தத்திலிருந்து நீங்கிவிடுகிறீர்களோ?

இள:—அப்படித்தான் செய்யவேண்டுமென்று நினைக்கிறேன். ஆனால் அதைப்பற்றி வாக்குறுதி கூற முடிமுடியாது.

பிரபு:—ஏனெனில் அந்த அதிசயமாதின்மேல் உண்டாயிருக்கும் காதல் வரவரத் தணிந்துவிடும் என்று கருதுகிறீர்களோ?

இள:—இல்லை யில்லை. அது ஒருபோது மில்லை. இவ்வாறு ஆறுபேர் இத்தகைய விஷயத்தில் பந்தயம் போட்டுக்கொண்டு வேலைசெய்வது பெரிய உற்சாகமல்லவா!

இரண்டொரு நிமிடங்களுக்குப்பின் பிரபு இளவரசனை நோக்கி, "தாங்கள் என்னோடு ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளுகிறீரா?" என்று கேட்டார்.

இள:—உன் எண்ணத்தைக் கூறு பார்ப்போம்.

பிரபு:—நான் நீர் காதல் கொண்ட அந்த அதிசய மாதின் இருப்பிடத்தைக் கண்டறிந்து தங்கள் கைக்கு அவளைச் சிக்கும்படி செய்தால் தாங்கள் இந்த மதனவல்லியின் விஷயத்தில் பிரவேசியாது விட்டுவிடுகிறீர்களா? தங்கள் உதவியால் நான் அதில் ஜெயமடைந்தால் பரிசு வரும் ஆறுயிரம் பவுனையும் நான் தங்களுக்கு அளித்துவிடுகிறேன்.

இள:—நான் எப்படி யதில் உனக்கு உதவிசெய்வது ?

பிரபு:—தாங்கள் ஒரு கஷ்டமும் எடுத்துக்கொள்ள வேண்டாம். தங்களுக்கும் அம்மாதிற்கும் நடக்கும் சம்பாஷணை முழுமையும் ஒன்றும் ஒளிக்காமல் என்னிடம் கூறிவிட வேண்டும்.

இளவாசன் அப்படியே யாகட்டும் என்று ஒப்புக் கொண்டார்.

இந்த ஏற்பாடுகள் இவர்கள் இருவருக்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

இவ்வாறு இவர்க ளிருவர்களும் சம்பாஷித்துக் கொண்டே சென்றார்கள்.

—

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
18 OCT 1929
MADRAS

9 - வது அத்தியாயம்.

கந்தபுரியிலுள்ள கோமளவல்லி தன் தமக்கையைப் பிறிந்த துயரோடு என்னமா யிருக்கிறுளென்று கவனிப்போம். அவளுடைய பரிசுத்தமான அழகையும், உத்தம குணங்களேயும்பற்றி முன்னம் கூறி யிருக்கிறோம். வயது 19 க்கு மேல் ஆயிற்று. இன்னம் இந்த உலக விவகாரம் இன்னதென்று தெரியாது. இந்த உலகத்தில் எத்தகைய நயவஞ்சகத் துரோகிக ளிருக்கிறார்களென்று அவள் அறியாள் பாபம். அப்படிப்பட்ட கள்ளங் கபடற்ற கன்னிகை தன்னேக் கவனித்துப் பாதுகாக்க ஒருவருமின்றி, சுற்றத்தார் சிநேகர் இவர்களிலாவது முதியோர் இவர்களிலாவது ஒருவருமின்றி, தானே குடும்பக் காப்பாய் ஒன்றுக்கும் உதவச் சக்தியின்றி தன் புத்தி தனக்கின்றி படுக்கையோடிருக்கும் அத்தையாரைப் பாதுகாத்துக்கொண் டிருப்பதாயின் கடவுள்தான் அவளேப் பாதுகாக்க வேண்டும்.

இப்போது நமது கோமளவல்லி தன் தமக்கையைவிட்டுப் பிறிந்து இரண்டு மாதங்களாயின. இடையில் என்ன நடந்ததென்று கவனிப்போம்.

கற்பகவல்லி சென்று இரண்டு நாள் கழித்து மூன்ருவது நாள் கோமளவல்லி மிக்க ஆவலோடு தபால்காரன் வாவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தாள். அன்று அவன் இவர்கள் வீட்டின் பக்கம் திரும்பாமலே போய்விட்டான். கோமளவல்லி மனச்சோர்வடைந்து வீட்டிற்குள் நுழைந்து தன் அறையிற் போய் துயாத்தை யடக்கமாட்டாது கண்ணீர் விட்டாள். நமது தமக்கையைச் சீக்கிரத்தில் காணமாட்டோமென்று அவள் மனதிற்குப் புலப்பட்டது. என்ன

விதமாய்த் தைரியங்கொண்டாலும் அவ்வுணர்ச்சி மாற வில்லை.

மறுநாள் மிக்க ஆவலோடு சென்று தபால்காரன் தன் வீட்டிற்குத் திரும்பும் வீதியின் திருப்பத்திலேயே சென்று காத்துக்கொண் டிருந்தாள். தூரத்தில் அவன் உருவத்தைக் கண்டதே யவள் மனம் துடி துடித்தது. இருதயம் வெடித்து விடும்போ லிருந்தது. ஆ! அவன் சற்று துரிதமாய் வருகிறுன். தன்னைக் கண்டதே கடிதக்கட்டில் கை வைக்கிறது. அவள் முகத்தில் பிரகாசம் உண்டாயிற்று. கட்டிலிருந்த கடிதங்களில் ஒன்றை யெடுத்துக் கையில் பிடித்து நீட்டிக்கொண்டே அவளருகில் நெறுங்கினுன். சட்டென்று அதை அவள் வாங்கிப் பார்த்தாள். மேல்விலாசம் தன் தமக்கையின் கையெழுத்தே. மிக்க சந்தோஷத்தோடு, தபால்காரனுக்கு வந்தனமளிக்கவேண்டியதைக்கூட மறந்து திரும்பித் துரிதமாய்த் தன் வீட்டிற்குள் நுழைந்து தன் அறைக்குச் சென்று கதவை மூடிக்கொண்டு மஞ்சத்தி லுட்கார்ந்து கடிதத்தைப் பிறித்துக் கீழ்க் கண்டபடி வாசித்தாள்:—

இரத்னபுரி 17—7—14.

என் பிரியமுள்ள தங்கைக்கு ஆசீர்வாதம். நான் சுகமாகவும் க்ஷேமமாகவுமே யிருக்கிறேன். கடவுள் உன்னையும் அவ்வாறே வைத்திருக்கிருரென்று நம்புகிறேன். உனக்கு அதிகமா யெழுத அவகாச மில்லாததால் சுருக்கமாகவே வரைகிறேன்.

நான் பாங்கிக்கார பச்சையப்ப பிள்ளையைக் கண்டு பிடித்தேன். கேவலம் இங்கு நேர்ந்த சில தவறுதல்களாலேயே நமக்குப் பணம்வரத் தடைப்பட்டது. அவர் மிக்க

நல்ல பெரிய மனிதர். நமது அத்தையிடமும் தாய் தந்தையரிடமும் இருந்த விசுவாசத்தாலேயே அவர் நமக்குப் பணம் அனுப்பி வந்தார். இதோ இதில் வைத்திருக்கும் நூறு பவுன் நோட்டை யவர் கொடுத்து உனக்கு அனுப்பச் சொன்னார். அப்படிப்பட்ட தயவுடையவர் என்மேல் புத்திரி வாஞ்சைகொண்டு நான் தன்னிடமே தற்காலம் இருக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளும்போது நான் எப்படி மறுக்கக்கூடும். நம் இருவருடைய க்ஷேமாபிவிருத்திக்காகவே நான் அவர் விருப்பத்திற்கு மாறு கூறாமல் நடக்க வேண்டியவளா யிருக்கிறேன், நீ அத்தையைச் சாக்கிரதையோடு பாதுகாத்து வருவாயென்று பூரணமாய் நம்புகிறேன். பச்சையப்ப பிள்ளை இப்போது பழைய விலாசத்தில் இல்லை. இனிக் கடிதங்களைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கே யனுப்பவும். அத்தை முதலியவர்க்கும் என் க்ஷேமமும் வந்தனமும் கூறவும். நீ யனுப்பவேண்டிய விலாசம்,

நெம்பர் 13. சாமி செட்டி வீதி,
வடக்குப்பேட்டை, இரத்னபுரி.

இப்படிக்கு
உன் அன்பார்ந்த தமக்கை
கற்பகவல்லி.

இக் கடிதத்தை வாசித்தபின் கோமளவல்லி ஆனந்தக் கண்ணீர் பொழிந்தாள். அரைமணிநேரம் அவள் மனம் ஒரு நிலையில் நிற்கவில்லை. அதன் பிறகு சமாளித்துக் கொண்டு உட்கார்ந்து தன் தமக்கைக்கு பதில் கடிதம் எழுதிவிட்டு நோட்டை மாற்றுவதற்காகப் புறப்பட்டாள்.

அவள் சாதாரணமாய் எந்த வேலைக்காகவும் வீட்டை விட்டு வெளியிற் செல்வதில்லை. வீட்டில் வேலை செய்யும் மீனாட்சியென்ற மாது மிக்க யோக்கியமானவள். மிக்க அன்

புடையவள். ஆகையால் என்ன வேலையா யிருந்தாலும் அவளே போய் நிறைவேற்றிக்கொண்டு வருவாள்.

கோமளவல்லி தன் தமக்கைக்கு எழுதிய கடிதத்தையும் நோட்டையும் எடுத்துக்கொண்டு கந்தபுரிக்குச் சென்று கடிதத்தைத் தபாலில் போட்டுவிட்டு தாங்கள் லேவாதேவி செய்யும் பாங்கிக்குச் சென்று, பாங்கித் தலைவர்க்குத் தன் தமக்கை யெழுதிய சமாசாரங்களைக் கூறி நோட்டை நாணயமாய் மாற்றிக்கொண்டு அங்கிருந்து வீட்டிற்குத் திரும்பப் புறப்பட்டாள்.

அவள் அங்கிருந்து புறப்படும்போது குருவின் உடை தரித்திருந்த ஒருவன் அவளைப் பின் தொடர்ந்து இரண்டு மூன்று வீதிகள் சென்றான். அங்கு அவள் சில சிறு சாமான்கள் வாங்குவதற்காக ஒரு கடைக்குள் நுழைந்தாள். அம்மனிதன் அக்கடையின் எதிரில் நின்றுகொண்டிருந்தான். அவள் சாமான்களை வாங்கிக்கொண்டு வெளியில் புறப்பட்டதே அம்மனிதன் விலகி வழி விட்டுவிட்டு அவள் ஒரு அடி முன் செல்லும்போது அம்மனிதன் அவளைத் தடுத்து பேசத் தொடங்கி,

"நீ யாரா யிருந்தாலும் நான் கூறும் புத்திமதியாகிய எச்சரிக்கையைச் சற்று கவனமாய்க் கேட்க விரும்புகிறேன். இந்நகரில் கள்ளரும் ஏமாற்றும் ? துஷ்டர்களும் அதிகம்; ஆகையால் நீ மிக்க ஜாக்கிரதையாய் நடந்துகொள்ள வேண்டும். நீ பாங்கியில் நோட்டை மாற்றும்போது நான் பார்த்தேன். நானும் அங்கு ஒரு செக்கை மாற்றவே வந்தேன். அப்பணத்தைப் பையில் போட்டு கையில் வைத்துக்கொண்டிருக்கிறாய். கடைகளில் பேரம் பேசும்போது எங்காவது அதை கை நழுவி விட்டுவிட்டால் என்னசெய்வாய்? உன் போன்ற கன்னிகைகள் எத்தனையோ பேர் ஏமாந்துபோய்

இடுக்கண்களில் சிக்கிக்கொண் டிருக்கிறார்கள்'' என்றான். கள்ளங் கபடறியாத அக்கன்னிகை இவன் குருவின் உடையணிந்திருந்ததால் மிக்க கருணையோடு நமக்கு எச்சரிக்கை செய்கிறான் என்றெண்ணிக்கொண்டு“தங்கள் கருணைக்காகவும் எச்சரிக்கைக்காகவும் மிக்க நன்றி யறிதலோடு வந்தனமளிக்கிறேன்'' என்று கூறிவிட்டு, பணப்பையை மடியில் வைத்துக்கொண்டு நடந்தாள்.

ஆனால் அம்மனிதன் அவளைத் தொடர்ந்து வந்து மிக்க கருணையோடு, ''நீயும் நான் போகும் வழியே செல்வதாய்த் தெரிகிறது. ஆகையால் உனக்கு ஆக்ஷேபனை யின்றேல் உனக்கு வழிபிரியும் இடம் வரையில் நான் துணையாய் வரக் கருதுகிறேன்'' என்றான்.

கோமளவல்லிக்கு உலக அனுபவ மில்லாவிடினும், தன் அத்தையார் அனுபவமாய்க் கூறியிருக்கும் புத்திமதிகளாலும், தான் கல்வியில் கற்றுணர்ந்த அனுபவத்தாலும் “இவன் கூறும் மொழிகளும் பார்க்கும் பார்வையும் ஒருவித அதிருப்தியாய் இருக்கிறதென்றும், இவன் சொற்படி நடப்பது ஒழுங்கீனமானதாய்ப் புலப்படுகிறதென்றும் அவள் மனதிற் பட்டது. ஆகையால் அவள் அம்மனிதனை நோக்கி “அய்யா நான் பல விடங்களுக்குச் செல்லவேண்டியிருக்கும். ஆகையால் உங்கள் உதவிக்காக வந்தனம். போய்வருகிறேன்'' என்று கூறிவிட்டுத் தன் வழியே துரிதமாய்ச் சென்றாள்.

பிறகு அவள் பலவிடங்களில் நுழைந்து சாமான்கள் வாங்கும் அவசரத்தில் அம்மனிதனுடைய சம்பவத்தை யடியோடு மறந்துவிட்டாள். ஆனால் அவனோ வீதியில் கோடியில் அவள் வருகைக்காகச் சாக்கிரதையாய்க் காத்துக் கொண்டே யிருக்கிறான்.

அம்மனிதனுக்குச் சுமார் 40-வயதிருக்கும்; அவன் துர்நடக்கைகளால் தன் தேகத்தைக் கெடுத்துக்கொண்டிரா விட்டால் பார்வைக்கு அழகுடையவனுகவே யிருப்பான். இப்போதே அவன் முகம் அழகு குன்றி ஓர்வித விகார மடைந்திருந்தது. ஆயினும் இவன் குருத்தொழிலி விருப்ப தால் வாசிப்பாலும் மூளைக்கதிகத் தொழில் கொடுத்த தாலும் அம்மாதிரி யிருக்கிருன் என்று உலகோர் எண்ணி யிருக்கிருர்கள். அவன் பிரபு வமிசத்தைச் சேர்ந்தவனுன தால் செல்வாக்குள்ள சிபாரிசின்மேல் கந்தபுரிக்கு மாற்றப் பட்டு சொற்பகாலமே யாயிற்றெனினும் அவன் மகா சாந்த வானென்றும் தெய்வபக்தியுடைய பரமயோக்கியனென்றும் புகழ்ச்சி செய்யும் முகஸ்துதிக்காரர்கள் பலரை சிநேகம் செய்துக்கொண்டான். அதோடு அவன் பிரசங்கம் செய்வ தில் சுறுசுறுப்புடையவனுகவும் கந்தபுரியிலுள்ள மடத்தின் பாதாள கிடங்குகளிலுள்ள புராதன நூல்களை யப்போதைக் கப்போது ஆராய்ச்சி செய்துவந்ததாலும் அவன் மகாயோக் கியனென்றே அந்த நகரத்தார் நம்பிக்கொண்டார்கள்.

மடத்திற் கருகாமையில் இருக்கும் ஒரு புராதன வீட் டில் அவன் வசித்துக்கொண்டிருந்தான். அந்த வீட்டில் ஆவேசமிருப்பதாய் ஊரார் கூறிக்கொண் டிருந்தார்கள். அவன் பிரம்மச்சாரி.

கோமளவல்லிக்கு அவன் யாரென்று தெரியாதெனி னும் அவன் தன்பெயரைக் கூறுவானேல், இவன் யாவரா லும் புகழ்ந்து கூறப்பட்ட இவ்வூர் குருவென்று உடனே தெரிந்து கொள்வாள். அவள் கடையைவிட்டு வெளிப்பட் டதே தூரத்தில் அம்மனிதன் நிற்பதைக் கண்டு கோபமும் வெறுப்பு மடைந்து சட்டென்று கடைக்குள்ளே நுழையலா மென் றெண்ணினுள். மறுபடி சே இது கோழைத்தன

மாகுமென்றெண்ணி, அவன் நிற்குமிடத்தின் பக்கமாய்ச் செல்லும் பாதையை விட்டு வேறுவழியாய்ச் சென்றாள்.

அம்மனிதன் உடனே அவளைப் பின்தொடரவில்லை. அங்குள்ள ஒரு கடையெதிரில் தொங்கும் சிப்பங்களைக் கவனித்துக்கொண் டிருப்பவன்போ லிருந்தான். கோமளவல்லி துரிதமாய் அவ்வீதியைக் கடந்து சமீபத்திலிருக்கும் தேவ வனம் என்ற நகர உத்தியான வனத்திற்குள் நுழைந்தாள்.

தேவ வனம் ஒரு பிரக்யாதிபெற்ற அழகிய தோட்டம். அதன் மத்தியில் ஒரு செய்குன்று ஒன்றுளது. அதன் உச்சியில் ஒரு சலவைக்கல் கம்பம் நாட்டப்பட்டு அதைச் சுற்றிலும் ஆசனங்கள் அமைக்கப்பட்டு இடையிடையே நறுமண மலர்ச்செடிகள் தொட்டிகளில் வைக்கப்பட்டிருக்கும். அக் குன்றின் அடிவாரத்தி லிருந்து அதைச் சுற்றிச் சுற்றிக் கொண்டே ஒரு பாதை உச்சிக்குச் செல்கின்றது. அப் பாதை யோரங்களில் அலங்காரமாய்ச் செடிகள் வைக்கப் பட்டிருந்தன. கோமளவல்லி தன் வீட்டிற்குச் செல்ல அது சமீபமான குறுக்குப் பாதை,

அவள் அத்தோட்டத்தின் வழியாய்ச் சென்று கொண் டிருக்கையில் யாரோ பின்னால் துரிதமாய் வருவது போல் காலடிச் சத்தம்கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். மறு நிமிடம் அக்குரு அவளருகில் வந்து நின்றான்.

கோமளவல்லி யவனைக் கண்டதும் வியப்பும் பயமும் அடைந்து அவனை யுற்றுப்பார்த்தாள்.

அதற்குள் அவன் அக்கன்னிகையை நோக்கி மிக்க பட்சமுள்ள நயமான வார்த்தைகளால்,

"நான் முன்னமே நமது வழி ஒன்றாகவே யிருக்கிற தென்று கூறினேன். நான் உனக்குத் துணையாய் வீட்டு வரையில் வரும்படி நீ யனுமதி தரவேண்டும்" என்றான்.

கோமளவல்லி :—"ஆயினும் மன்னியுங்கள். எனக்குத் துணை யவசியமில்லை" என்றாள்.

அவன்:—"நான் இந்நகர குரு. நீ என் துணையோடு வீதிகளில் செல்வதால் கௌரவத் தாழ்வு சற்றுமில்லை; நான் பட்சத்தால் கூறுவதால் நீ மறுக்கலாகாது. நீதனியாய் இவ்வீதிகளில் செல்வதைக் கண்டு நான் உதவி புரியாது விடுதல் எனக்கு நியாயமாய்த் தோன்றவில்லை" என்றான்.

கோமளவல்லி அவன் வார்த்தைகளைக் கேட்டு வியப்படைந்து "பயப்படவேண்டிய காரணம் என்னவிருக்கிறது? எனக்கொன்றும் தோன்றவில்லையே" என்றாள்.

அவன்:—"அப்படியா! பயப்படவேண்டிய காரணம் எத்தனையோ விருக்கிறது. இங்கு துஷ்டர்கள் அநேகர் இருக்கிறார்கள். சூதாய் மயக்கித் துஷ்டவழியில் பிரவேசிக்கத் தூண்டும் ஏதுக்கள் பலவிருக்கின்றன. அப்படியிருக்க உலக அனுபோக மறியாத உன்போன்ற கன்னிகைகளுக்கு எச்சரிக்கை செய்யவேண்டுவது என் கடமையா யிருக்கிறது" என்று மிக்க இரக்கத்தோடு கூறினான்.

கோமளவல்லி இவ்வார்த்தைகளால் மயங்கிப்போய் "ஒருவேளை யிம்மனிதன் நல்ல எண்ணத்தோடும் இரக்கத்தோடும் கூறுகிறானக்கும். நாம் வெட்டிப்பேசினால் வீணாய் இவனுக்கு மன வருத்தமுண்டாகுமே" என்று தனக்குள் எண்ணிக்கொண்டு, "அய்யா உமக்கு மிக்க வந்தனமளிக்கிறேன்," என்றாள்.

குரு:—"நீ இளவயதுடையவள், அதோடு அழகுடையவளாயிருக்கிறாய். உலகில் இப்பேர்ப்பட்டவர்களுக்கே மிக்க இடையூறுண்டாவது. என் போன்ற குருவினுடைய

வேலை கோயிலில் நின்று பிரசங்கம் செய்வதோடு மட்டும் நின்றுவிடவில்லை. பகிரங்கத்திலோ இரகசியத்திலோ சந்தர்ப்பம் நேரிட்டபோதெல்லாம் இவ்வுலகத்திலுள்ள படுமோசமான பள்ளங்களில் விழுந்து விடாதபடி உன் போன்றவர்களுக்குப் புத்தி மதி கூறி எச்சரிக்கை செய்வது எம்போலியருடைய கடைமையா யிருக்கிறது. அதுவுமன்றி என்ன காரணத்தாலோ உன்னைக் கண்டபோது எனக்குச் சகோதரியாவது, புத்திரியாவது இருந்தால், அவர்கள் விஷயத்தில் எப்படி கவலை யெடுத்துக் கொள்வேனோ அவ்வாறே யுன் விஷயத்தில் மனம் நாடுகிறது'' என்று மிக்க உருக்கமான மொழிகளால் கூறினான்.

அவனுடைய நயவஞ்சக மொழிகளைக் கேட்ட கோமளவல்லியின் மனம் மிக்க கலவரமடைந்தது. ஒருபக்கம் இவன் சுயநலங்கருதாது சிவ காருண்யத்தாலேயே நமக்கு உதவி செய்ய வேண்டுமென்றே கருதியிருக்கிறான் என்று அவள் மனத்திற்றோன்றியது. மறுபடி இன்னொரு பக்கம் "ஜாக்கிரதையாயிரு; இவனுடைய நயவஞ்சக மொழிகளைக் கேட்டு ஏமாந்துவிடாதே'' என்று உள்ளிருந்து யாரோ எச்சரிக்கை செய்வதுபோ லிருந்தது. அவள் தலை நிமிர்ந்து அவன் முகத்தை நோக்கினாள். அம்முகமோ, "ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! ஏமாந்து விடாதே! பெருமோசம். மிக்க ஆபத்து'' என்று கூறுவதுபோ லிருந்தது

கோமளவல்லி நாற்புறமும் பார்த்தாள். ஒருவரும் புலப்படவில்லை. மனதை மெதுவாய்த் தைரியப் படுத்திக் கொண்டு அவனை நோக்கி,

"அய்யா! இப்போது எனக்கு என்ன ஆபத்து நேரிடுமென்று தாங்கள் கருதுகிறீர்கள்?'' என்றாள்.

குரு:—“முதலாவது நான் யாரென்று உனக்குத் தெரியுமா?”

கோமளவல்லி:—எனக்குத்தெரியாது. ஆனல் நீர் ஒரு குருவென்று நினைக்கிறேன்.

குரு:—என் பெயர் கனம் பொருந்திய சுகானந்த ஸ்வாமிகள்.

கோம:—தாங்கள் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

குரு:—அப்படியாயின் நான் உன் நன்மைக்காகவே கூறுகிறேன் என்று நம்புகிருயா?

கோம:—நான் வேறு விதமாய் நினைக்கவில்லை. தாங்கள் என்னமோ ஆபத்து நேரிடுமென்றீர்களே?

குரு:—நீ எங்கிருப்பது? இவ்வூரிலேயே இருக்கிருயா?

கோம:—அய்யா! நான் சமீபத்திலேயே வசிக்கிறேன். எனக்குத் தாய் தந்தையராவது உறவினராவது இல்லை. என்தமக்கை இரத்னபுரிக்குச் சென்றிருக்கிருள். நான் படுக்கையோடு காயலாவாயிருக்கும் என் அத்தையைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறேன்.

குரு:—அப்படியாயின் நீ தனியாய் வியாதியஸ்தியான அத்தையாரோடு வசிக்கிருய்?

கோமளவல்லி துயரத்தோடு ஆம் என்றுள்.

குரு:—“தயவு செய்து உன் பெயரையும் நீ வசிக்கும் ஸ்தலத்தையும் கூறு. நான் உனக்கு உதவியாகிய சிநேகனுகவிருப்பேன்” என்றுன்.

அவன் அவ்வாறு கூறும்போது அவன் கண்களில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று. அவன் நாற்புறமும் நோக்கினன். அச்சமயம் ஒருவரும் அங்கு புலப்படவில்லை.

அவன் உடனே கோமளவல்லியின் கரத்தைப் பிடித்தான். அவள் திகிலடைந்து உடனே கரத்தை யிழுத்துக்கொண்டாள். அதே நிமிடம் அங்கிருந்த ஒரு மரத்தின் மறைவில் போட்டிருந்த ஆசனத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபன் தட்டென்றெழுந்து இவர்களை நோக்கி வந்தான்.

அவ்வாலிபன் குருவை நோக்கிக் கோபத்தோடு "அய்யா சுகானந்தரே! இம்மாதுக்கு உம்முடைய சினேகத்தால் ஒரு பயனுமுண்டாகாது. தெரிகிறதா நான் கூறுகிறது?" என்றான்.

குரு:—ஜெகதீசம் நீ என்னைப்பற்றி தவறாய் நினைக்கிறாய்....

ஜெகதீசன் பின்னும் கோபத்தோடு "போதுமையா போதும். கோயில் அந்தப்புரத்தில் நடந்த சம்பவத்தை நினைத்துக்கொள்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே குருவின் முகம் கறுகறுத்து விட்டது. அவன் மிக்க கோபமான பார்வையாய் ஜெகதீசனை முறைத்துப் பார்த்து விட்டு தலை குனிந்தபடி வந்தவழியே சென்றான்.

வாலிபன் குருவினிடம் கூறிய மொழிகளின் பொருள் இன்னதென்று கோமளவல்லிக்குத் தெரியாதெனினும் அவ்வாலிபன் தன்னைப் பெரிய ஆபத்தினின்று காப்பாற்றினான் என்று மட்டும் அவள் மனதிற்குப் புலப்பட்டது. அவன் அவளுக்குத் தேறுதல் கூறியபோது அவன் மொழிகள் சகோதரவாஞ்சை யுடையவையாகவும் மரியாதை யுடையவையாகவும், பெருந்தன்மையாகவும் இருந்தன.

ஜெகதீசன் நமது கதையின் தொடர்ச்சிக்கு ஒரு முக்கிய பாத்திரமானவனாதலால் அவனைபபற்றிச் சற்று விவரமாய்க் கூறுவாம். அவனுக்கு வயது 23. மிக்க அழகு

வாய்ந்தவன், நல்ல வாசிப்புடையவன். அவன் உயர்குடியிற் பிறந்தவனென்றே அவனுடைய தோற்றத்தாலும் சம்பாஷணையாலும் நடை யுடை பாவனையாலும் தெரிந்து கொள்ளலாம். அவனிடம் பெருமை, டம்பம், அகங்காரம் முதலிய துர்க்குணங்கள் இருக்க இடமில்லை. கருணையும், யாவரிடமும் அடக்கமும் மரியாதையும், மனவிரக்கமும் உடையவன்.

அவன் சுகானந்தர் என்ற குருவின் நடக்கையை நன்கறிவான். ஆதலால் ஒரு அழகிய கன்னிகையோடு அவன் பேசிக்கொண் டிருக்கையில் ஜெகதீசன் கவனித்து வந்தான். ஆரம்பத்திலேயே கோமளவல்லியினுடைய முகத்தையும் அவள் நடந்துகொள்ளும் மாதிரியையும் கண்டதே யிவள் மிக்க யோக்கியமானவளேயென்று சந்தேகித்தான். கடைசியில் குரு அவள் கரத்தைப் பிடித்தபோது அவள் நடந்து கொண்ட மாதிரியால் "ஓகோகோ! இவள் உண்மையாகவே யோக்கியமானவள் என்று அவன் மனதிற்பட்டது. எந்த யோக்கியமான கன்னிகையும் அக்குருவின் சினேகிதத்தால் நன்மை யடைய மாட்டாளென்று அவன் நன்கறிவான். அதோடு அவன் ஸ்திரீ லோலனல்ல. அவன் பார்த்தவரையில் ஸ்திரீகளின்மேல் பொதுவா யவனுக்கு நல்ல அபிப்பிராயங் கிடையாது. இப்போது இக்கன்னிகையின் நடக்கையைக் கவனிக்கவே "இப்படிப்பட்ட கற்புடைய மாதருமிருக்கிறார்கள்" என்று அவன் மனதிற் பட்டதும் அவனுக்கு ஒருவித சந்தோஷ முண்டாயிற்று. ஆகையால் அவன் உடனே மறைவிடத்தினின்றும் வெளிப்பட்டு முன் கூறியபடி அவளை யாபத்தினின்றும் விடுவித்தான்.

---

10 - வது அத்தியாயம்.

கோமளவல்லி பூரணமாய்த் தேறுதலடைந்தபின் அவன் அவளை யழைத்துக்கொண்டு தேவ வனத்தைவிட்டு வெளிப்பட்டதும், அவன் சகோதர வாஞ்சையோடு அவளை நோக்கி, "உன்னை வீடுவரையில் கொண்டு வந்து விட்டுவிட்டால் என் மனம் நிம்மதியாயிருக்கும். ஆனால் உனக்குப் பிரியமில்லாவிடில் நான் திரும்பிச் செல்கின்றேன்" என்றான்.

அவன் ஆபத்தில் தன்னைக் காப்பாற்றியதையும், அவனுடைய அன்பும் மரியாதையுமான வார்த்தைகளையும் கவனித்த கோமளவல்லி யவனை வரவேண்டாம் என்று எப்படிக் கூறுவாள்? அப்படிக் கூறினால் அது மிக்க நன்றியற்ற செய்கையாய் இருக்குமென்று அவள் மனதிற்குப் புலப்பட்டது. உடனே அவள் அவனிஷ்டத்திற்குச் சம்மதிக்க அவன் அவ்வாறே யவளை வீட்டிற் கொண்டுபோய் விட்டுவிட்டு மரியாதையோடு பிறகு வந்து க்ஷேமத்தை விசாரிக்க அனுமதிகேட்டுப் பெற்றுக்கொண்டான். பிறகு மறுநாள் வந்து விசாரித்துச் சென்றான்.

இவ்வாறே அவன் இரண்டு மூன்று வாரங்களுக்குள் அடிக்கடி வரவும் போகவும் அக்குடும்பத்திற்கே மிக்க சிநேகமாய்விட்டான். அவ்வளவு பழக்கமாயும் அவன் நடக்கை சுயநலம் எள்ளளவும் கருதாத பழமையான நடக்கையாக விருந்ததன்றி சற்றேனும் அதிருப்தமானது எள்ளளவுங் கிடையாது.

கோமளவல்லி தன் தமக்கைக்கு எழுதும் கடிதத்தில் ஒன்றும் ஒளிக்காமல் ஜகதீசன் தனக்கு அறிமுகமானது

முதல் எல்லா சங்கதிகளேயும் ஒன்றேனும் ஒளிக்காமல் யாவும் விபரமாய் எழுதி யிருந்தாள்.

கற்பகவல்லி தன் தங்கைக்கு அடிக்கடி சந்தோஷமாகக் கடிதங்கள் வரைந்துகொண்டே யிருந்தாள். ஜெகதீசன் தன் தங்கைக்கு அறிமுகமா யிருப்பதைப்பற்றி அவள் சந்தோஷமே யடைந்தாள். கோமளவல்லிக்கு எழுதிய ஒரு கடிதத்தில் கீழ்க்கண்டபடி வரைந்திருந்தாள்:—

"......நீ ஜெகதீசனைப்பற்றிக் கூறும் விஷயங்களால் அவன் உத்தம குணமுடையவனென்றே விளங்குகிறது. அவன் சில வாரங்களாய் உனக்கு அறிமுகமாயிருந்தும், உன்னைத் தனியே தோட்டத்தில் உலவ அழைக்காதிருப்பதும், எப்போதும் நடுப்பகலிலேயே நீ வீட்டில் இருக்கும்போதே வந்து உன்னைக்கண்டு பேசிவிட்டுப்போவதும், அத்தையினுடைய தேகசுகத்தைப்பற்றியும் என்னைப்பற்றியும் தினந்தோறும் விசாரிப்பதும், உனக்குக் கூறும் நற்புத்திகளும் இவையாவும் அவனுடைய பெருந்தன்மையையும் மேலான சற்குணங்களையும் நன்கு வெளியிடுகின்றன. ஆகையால் நீ யவனுக்கு அதிருப்தியை யுண்டாக்கத்தக்க எதையும் செய்யாமல் ஜாக்கிரதையாகவே நடந்துகொள்வாயென்று நம்புகிறேன். இக்காலத்தில் கள்ளங்கபடறியாத கன்னிகைகளை நயவஞ்சகத்தால் ஏமாற்றிப் படுமோசம் செய்துக் கடைசியில் அவர்கள் மரணபரியந்தம் தீராத்துயரை யனுபவிக்கும்படி நட்டாற்றில் கைகழுவிவிடும் வாலிபர்கள் தான் எங்கும் ஏராளமா யிருக்கிறார்கள். ஆகையால் அரிதாய்க் கிடைத்த இத்தகைய சற்குணவானுடைய நட்பை நீ அலட்சியம் செய்யலாகாது. நான் இன்னும் அதிகமாய் உனக்கு இதைப்பற்றி எழுதவேண்டியதில்லையென்று நம்புகிறேன்."

இக்கடிதத்தைக் கண்ட கோமளவல்லி மிக்க சந்தோஷமடைந்தாளென்று நாம் கூறவேண்டியதில்லை. உலக அனு

பவமறியாத கன்னிகை யாதலால் ஜெகதீசன்மேல் தனக்குண்டாயிருக்கும் அன்பும், அவனை யொரு நாட் காணுவிடின், நாளைக்காவது காண்போமா என்றுண்டாகும் ஆவலும் காதலின் குறிகளென்று அவள் மனதில் அச்சமையம் தோன்றாவிடினும், அவனைப்பற்றி தன் தமக்கை யம்மாதிரி புகழ்ந்து எழுதியதும், குறிப்பாகவேனும் அவன் நட்பை மதித்துக் காப்பாற்றிக்கொள்ளும்படி கூறியதும் அவள் மனதிற்கு மிக்க சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்கியது.

இரண்டொரு வாரங்கள் கழிந்த பின் கோமளவல்லிக்குத் தன் தமக்கையிடமிருந்து இன்னொரு கடிதம் வந்தது. அதில் பின் வருமாறு வரையப்பட் டிருந்தது:—

"என் அன்பார்ந்த தங்கைக்கு—நீ கடைசியாய் வரைந்த கடிதத்தில் ஜெகதீசன் என் மேல் விலாசத்தை யெழுதித் தரும்படி யுன்னைக் கேட்டதாயும் நீ யப்படியே யெழுதித் தந்ததாகவும் கூறியிருந்தாயல்லவா? மேலும் என்னத்திற்காக கேட்கிறானென்று நீ வியப்படைந்ததாகவும் கூறியிருந்தாய். அக்கடிதம் எனக்கு வந்தபோது அதன் கூடவே ஜெகதீசன் எனக்கெழுதிய ஒரு கடிதமும் வந்தது.

அவன் கடிதத்திலிருந்த சங்கதியைக் கூறுமுன் நான் உனக்காக அடைந்த சந்தோஷத்தை வெளி யிடுகிறேன். அதாவது அத்தகைய உத்தமகுண சீலனுடைய முழு அன்பிற்கும் காதலுக்கும் நீ பாத்திரவாளியானதற்காக நான் மிக்க பேரானந்தம் அடைகின்றேன். இனி ஜெகதீசன் எழுதிய கடிதத்தில் அடங்கிய சங்கதியைக் கூறுகின்றேன்.

நமது அத்தையார் ஸ்மரணையற்றுக் கிடப்பதாலும், உனக்கு மூத்தவளாகிய நான் தூரத்திலிருப்பதாலும் உன்னை நேசிப்பதற்காகவும் தன் காதலை யுனக்கு வெளியிடற் காக

வும் என்னுடைய அனுமதியைக் கேட்கிருன்; அதோடு தன் நிலைமையைப் பற்றி அவனுடைய பாங்கிக்காரரைக் கேட்கும்படி யெழுதியிருக்கிருன். நான் அவர்களை விசாரித்ததில் யாவும் திருப்திகரமாகவே யிருக்கின்றன. இனி என் விஷயத்தைப் பற்றிக் கூறுகின்றேன். பச்சையப்பப் பிள்ளையும் அவர் மனைவியும் என்னை விடமாட்டோமென்கிருர்கள். என்னைத் தங்கள் சொந்த புத்திரியாய் வளர்த்துக் கொள்ள அவர்களுக்குப் பூரணப்பிரியமா யிருக்கிறது. அப்படியிருக்க நான் எப்படி அவர்கள் பிரியத்திற்கு விரோதமாய் நடப்பது? இனி உன் க்ஷேமத்தை மட்டுமே நான் கவனிக்க வேண்டும். ஜெகதீசனை நீ மணம் புரிய விரும்புவதாயின் உன்னையும் அத்தையையும் மிக்க சௌகரியமாக வேருெருவிடத்திற்கு அழைத்துக் கொண்டு போக எல்லா ஏற்பாடும் செய்திருப்பதாகத் தன் கடிதத்தில் எழுதியிருக்கிருன். நீ யவனை மணஞ் செய்து கொண்டால் மிக்க சுகத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ்வாயென்று நான் பூரணமாய் நம்புகிறேன்.

இப்படிக்கு
உன் அன்பான தமக்கை
கற்பகவல்லி.''

இக்கடிதத்தை வாசித்ததே ஜெகதீசன் தன்மேல் எவ்வளவு காதல் கொண்டிருக்கிருன் என்று அவளுக்குத் தெரிந்தது. அதனுல் அவளுக்குண்டான சந்தோஷத்தை இவ்வளவென்று கூறமுடியாது. தன் தமக்கையின் கடிதம் அவள் கைக்கு எட்டியபோது பகல் பத்துமணி யிருக்கும். இன்னம் இரண்டொருமணி நேரம் கழிந்தால் ஜெகதீசன் வழக்கமாய் வரும் வேளை. ஆகையால் கோமளவல்லி மிக்க ஆவலோடு தன் காதலனுடைய வருகைக்கு எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் கருதியபடியே சுமார் பனிரெண்டு மணிக்கு ஜெகதீசன் அங்கு வந்தான். அச்சமயம் தோட்டத்திலிருந்த கோமளவல்லி தானே போய் கதவைத் திறந்தாள்.

அவள் முகத்தைக்கண்டதே தான் எழுதிய விஷயங்களனைத்தும் தன் தமக்கை மூலமாய்க் கோமளவல்லி யறிந்து கொண்டாளென்று அவன் தெரிந்து கொணடான். அவனுக்கும் அன்று ஒரு மணி நேரத்திற்கு முன்தான் கற்பகவல்லியிட மிருந்து கடிதம் வந்தது.

இப்போதுதான் இருவர்க்கும் ஒருவர்க்கொருவர் காதல் வெளிப்படையாய்ப் புலப்பட்டுவிட்டது. ஆகவே இருவரும் மனங்கலந்து தங்கள் காதலை ஒருவருக் கொருவர் வெளியிடவேண்டிய தாயிற்று. தோட்டத்திலிருந்த ஒரு ஆசனத்தில் இருவரும் உட்கார்ந்து சந்தோஷமாய்த் தங்கள் காதலைப்பற்றி சம்பாஷித்துக்கொண் டிருக்கிறார்கள்.

அச்சமயம் பொறாமையால் எரியும் மனதையுடைய ஒரு ஆசாமியின் கண்கள் கொள்ளிக்கட்டைகள்போல் இவர்களைச் செடிகளின் மறைவிலிருந்து பார்த்துக்கொண்டே யிருக்கின்றன.

அவ்வாறு பார்த்துக்கொண் டிருப்பது யாரென்று நினைக்கிறீர்கள்? கந்தபுரியின் குருவாகிய சுகானந்த சுவாமிகள் என்ற துஷ்டனே யப்படிப் பார்த்துக்கொண்டிருப்பவன். அவன் அவ்வாறு பார்த்துக்கொண்டே யிருந்து கடைசியில் பொறாமையால் பெருமூச்சுவிட்டு "ஆகட்டும். ஆகட்டும். அவள் எனக்கே சொந்தம். எனக்கே சொந்தம்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டே பூனைபோல் அந்த இடத்தைவிட்டு மெதுவாய் வெளிச் சென்றான்.

OFFICE OF THE REGISTRAR OF ... No. ... 18 OCT 1929 ... MADRAS

11 - வது அத்தியாயம்.

மேற் கூறிய சம்பவங்கள் நடந்தது கற்பகவல்லியும் கோமளவல்லியும் பிறிந்த நான்கு மாதங்களுக்கிடையில். இப்போது இவர்கள் சங்கதியைவிட்டு, மாரகதவல்லியையும், அவளுடைய நான்கு புத்திரிகளையும் பற்றி கவனிப்போம்.

இளவரசன் அவர்கள் வீட்டிற்கு வந்திருந்து சென்ற மறுநாள் காலை ஒன்பது மணி யிருக்கும். நால்வரில் கடைசியாகிய மீனும்பாள் என்ற கன்னிகை தன் தாயாரின் அறையில் தாயோடு ஏதோ சம்பாஷித்துக்கொண் டிருக்கிறுள். மற்ற மூன்று சகோதரிகளும் ஒரு அறையி லுட்கார்ந்து கொண்டிருக்கிறுர்கள். அவர்கள் சம்பாஷணையை நோக்க அவர்கள் ஏதோ ஒரு விசேஷமான சங்கதியைப் பற்றியே பேசிக்கொண் டிருக்கிறுர்கள் என்று புலப்படுகிறது.

அங்கிருக்கும் மூவரில் அம்புஜம் என்ற இரண்டாவது சகோதரி மற்ற இருவரையும் நோக்கி,

"நமது தாயார் நம் ஒவ்வொருவருக்கும் தனித்தனி கூறிய புத்திமதியையே யிப்போது நமது மீனும்பாளுக்கும் உபதேசிக்கிறுர்கள்போல் தோன்றுகிறது." என்றுள்.

ஜானகி என்ற மூன்றுவது சகோதரி "அம்மா இந்த விஷயத்தில் எவ்வளவுதூரம் தாராளமாய்ச் செல்லலாம், எங்கே நிற்கவேண்டும் என்று மீனும்பாளுக்குக் கூறுகிறுர்களென்று நினைக்கிறேன்" என்றுள்.

மூத்த சகோதரியாகிய இரங்கம்மாள் "நாம் ஒத்துக் கொண்டதுபோலவே மீனும்பாளும் நம் தாயார் கூறும்

புத்திமதிகளை யப்படியே ஒப்பிக்கொள்வாளென்று நம்புகிறேன்" என்றாள்.

அச்சமயம் அம்புஜம் "உஸ்" என்றாள். ஏனெனில் அச்சமயம் யாரோ வருகிற காலடிச் சத்தம் கேட்டதும் மறுநிமிடம் மீனும்பாள் அறைக்குள் வந்தாள். மூன்று சகோதரிகளும் ஆவலோடு அவளை யெதிர்நோக்கிச் சென்றார்கள். மீனும்பாளுடைய முகம் வெளுத்து மிக்க பயமடைந்தவள் போலிருந்தது. அவள் 16 வயதுடைய இளங்கன்னிகையென்றும், மூத்தவளாகிய இரங்கம் 22 வயதுடையவளென்றும் அம்புஜம் ஜானகி இருவரும் முறையே 20 வயதும் 18 வயது முடையவர்களென்றும் முன்னமே கூறி யிருக்கிறோம்.

மூவரும் மீனும்பாளைச் சூழ்ந்துகொண்டு "தங்காய்! உட்கார். உட்கார்ந்து தாயார் உனக்கு என்ன புதிமதி கூறினார்கள்? யாவற்றையும் விவரமாய்க் கூறு" என்று மூவரும் ஒரேவாக்காய்க் கேட்டார்கள்.

மீனும்பாள் முகங்கறுத்து "அந்தோ! தாயார் கூறியது இன்னதென்று நீங்கள் முன்னமே பூராய்த் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள்" என்று கண்ணீர் விட்டுக்கொண்டே கூறினாள்.

இரங்கம் அவளை நோக்கி, "குழந்தாய் உன் கலவரத்தை யடக்கிக்கொள். நமது தாயார் உனக்குக் கூறிய புத்திமதி யின்னதென்று எங்களுக்குத் தெரியும். நமது தாயார் கூறிய புத்திமதி யாவும் நமக்கு நன்மையையே யுண்டாக்கத் தக்கதென்று நன்றாய்த் தெரிந்துகொள்" என்றாள்.

மீனும்பாள்:—"அப்படியாயினும் அம்மொழிகள் என்னைத் திடுக்கிடச் செய்தன. அம்மொழிகள் என் மனதில் இடி விழுந்ததுபோ லிருந்தன." என்றாள்.

இரங்கம்:—"என் அன்பே. அந்த உணர்ச்சி சீக்கிரத்தில் மனதை விட்டு அகன்றுபோம்" என்றாள்.

மீனும்பாள் தன் மூன்று சகோதரிகளையும் நோக்கிச் சற்று கோபத்தோடு, "உங்களுக்கு நமது தாயார் அதிலும் நம்மை யீன்ற சொந்த தாயாரே யித்தகைய புத்திமதிகளைக் கூறினளென்று உங்களுக்குத் தெரிந்திருக்கையில் நீங்கள் இதுகாறும் அதை யென்னிடம் ஏன் கூறவில்லை?" என்றாள்.

இரங்கம்மாளாகிய மூத்த சகோதரி, "தங்கையே! நமது தாயார் உலக விஷயம் நன்கு யறிந்தவள். அவள் புத்திரிகளாகிய நாமும் தன்னைப்போல் உலக மறிந்தவளா யிருக்கவேண்டுமென்பது அவள் பிரியம். நடந்த சங்கதிகளை நாங்கள் உன்னிடம் கூறவில்லையென்று எங்கள் மேல் நீ குற்றம் சுமத்துகிறாய். ஆனால்; அத்தகைய புத்திமதிகளை உனக்கு முதல் முதல் உபதேசிப்பது எங்கள் வேலையல்லவே. நாங்கள் அப்படி முன்னடியே யுன்னிடம் இவற்றைக் கூறிவிட்டிருந்தால் தாயார் கூறிய புத்திமதிக்கு விரோதமாய் நடந்து கொண்டவர்க ளாவோம்" என்றாள்.

மீனும்பாள் மிக்க வெறுப்போடு, "ஆம் ஆம். சூதும் வஞ்சகமும் பழகிக்கொள்ளவேண்டும். மேலுக்கு களங்க மற்ற தன்மையையும் மிக்க யோக்கியதையையும் காட்டிக் கொண்டு உள்ளத்தில் சூது, மோசம், குடி கெடுத்தல் முதலிய துரோக சிந்தனைகளைப் பால் வார்த்து வளர்த்துவர வேண்டும். மேலுக்குத் தேன்போல் காட்டி, உள்ளத்தில் கொடிய நஞ்சையளிக்க ஆயத்தமா யிருக்கவேண்டும். நான் பொய்யே உருவாய்விடவேண்டும். படுமோசமே என் வடிவமாய்விடவேண்டும். கடவுளே! கடவுளே! அதில் என்னைப் பெற்ற தாயே யிப்புத்திமதிகளைக் கூறுகிறாள்." என்றாள்.

மூத்தவளாகிய இரங்கம்மாள் அவளை இரக்கத்தோடு நோக்கி, "அடி பைத்தியக்காரி உண்மையாலும் நீதியாலும்

நேர்மையாலும் இவ்வுலகில் என்ன சுகத்தை யடையலா மென்று எண்ணியிருக்கிறாய்? சரியான பதார்த்தமில்லாமல் தண்ணீரும்சாதமும் உண்டுகொண்டு காப்பாற்றப்பட்ட கற்பினால் என்ன சுகம் இருக்கிறது? பேசாமல் எங்களோடு ஒருமித்து நாங்கள்நடப்பதுபோல் நீயும் நடந்துகொண்டால் உலகில் எல்லா போகபாக்கியங்களையும் சந்தோஷமாய னுபவிப்பாய்'' என்றாள்.

மீனாம்பாள் மனதில் ஏதோ சிந்தித்துக்கொண்டே "அதற்குச் சந்தேகமில்லை. நானும் போகப்போக உங்களைப் போல்தான் நினைப்பேன். ஆனால் ஆரம்பத்தில் மனதிற்கு மிக்க வெறுப்பாகவே யிருக்கிறது. அதிலும் தன்மக்களுக்கு நல்ல புத்திமதிகளைக் கூறி அவர்களை நல்ல நடக்கைகளில் பயிற்சி செய்யவேண்டிய தாயாரே இத்தகைய புத்திமதிகளைக் கூறுவதாயின் யாருக்குத்தான் வெறுப்பும் கோபமுமுண்டாகாது'' என்றாள்.

மூத்தவள்:—"நீ யுண்மையாகவே இவ்வுலகில் நேர்மையும் நன்னடக்கையும் கற்பும் இருக்கிறதென்று நினைக்கிறாயா ?'' என்று வினவினாள்.

மீனா:—அப்படி நினைக்காமல் வேறு என்னென்று நினைப்பேன். நமது தாயார் இன்றுவரையில் இத்தகைய விஷயங்களைப்பற்றி நம்மிடம் சம்பாஷித்ததே யில்லை. நீங்கள்மூவருங்கூட இதுகாறும் மௌனமாகவே இருந்தீர்கள்.

மூத்:—அப்படியானால் கண் மூடிக்கொண்டு இருந்திருக்க வேண்டும்.

மீனாம்பாள் துயரத்தோடு "ஆம் உண்மையாகவே நான் கண்மூடிக்கொண்டுதான் இருந்தேன். ஆனால் இப்போது

என் கண்கள் பூரணமாய்த் திறந்து கொண்டன. நான் கொஞ்சநாளாய் ஆரம்பப் பயிற்சியிலிருந்ததுபோல் தோன்றுகிறது. ஆனால் அதை நான் உணரவில்லை. இதுவரையில் நடந்த விளையாட்டுகளும் வேடிக்கைகளும் வேண்டுமென்றே நம்முடைய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற குணங்களைக் கொஞ்சங் கொஞ்சமாய் வேரறுக்க வேணுமென்றே ஏற்படுத்தப்பட்டன. ஆனால் நான் அவை குற்றமற்றவையென வெண்ணி யிருந்தேன்.'' என்றாள்.

இரண்டாவது சகோதரியாகிய அம்புஜம் "சரி, ஆனால் நீ யிப்போதுதான் பள்ளியிற படிக்கும் பெண்ணைப்போல் முண முணவென்று கொஞ்சம் சிணுங்குவாய்போல் காண்கிறது'' என்றாள்.

3 வது சகோதரியாகிய ஜானகி "சேசே நீ சுத்த அறிவில்லாதவள்'' என்றாள்.

186537
சென்னை-600 008

மூத்:—சே சே! நீங்கள் மீனும்பாள்மேல் குற்றங் கூறுவது தவறு. நீங்கள் ஒவ்வொருவரும் அவளைப்போலவே முதலில் திகில்கொண்டு துக்கப்பட்டீர்களல்லவா?

பிறகு மூவரும் அவளைத் தட்டிக்கொடுத்து ஆலிங்கனம் செய்துகொண்ட பிறகு மூத்தவள்,

"குழந்தாய்! இப்போது நமது தாயார் என்ன கூறினார்கள் என்பதைச் சாவதானமாய்க் கூறு!'' என்றாள்.

மீனு:—தாயார் கூறியவற்றையெல்லாம் வரிசைக் கிரமமாய்க் கூற என்னால் முடியாது. ஆனால் அவற்றின் கருத்து என் மனதில் என்றும் மறவாவண்ணம் என் மனதி லுறுத்தியது. முதலாவது. இளவரசன் நமது குடும்பத்தில் எவ்வித சம்பந்தங்கொண் டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. கடந்த நான்கு வரு

டங்களாய் அவர் அடிக்கடி வருவதும் போவதும் எப்படி, ஏன் சம்பவித்திருக்கிறதென்று நான் சிந்திக்கவேயில்லை. இப்போதுதான் தாயார் இதெல்லாம் ஒரு காரியத்தை யுத்தேசித்துதான் நடைபெறுவதாய் கூறினதைக் கேட்டு எனக்கு மிக்க வியப்பாய்விட்டது. அதிலும் நாம் செல்வமடையும் பொருட்டு கூறிய மார்க்க மிருக்கிறதே, ஆ! கடவுளே! கடவுளே!! அதிலும் தானே யவ்வழியில்தான் நடந்து வந்ததாகவும் இன்றேல் இப்போது நாமனைவரும் ஒரு தொழிற்சாலையில்தான் வேலை செய்துக்கொண் டிருக்கவேண்டுமென்று நமது தாயாரே நம் முகத்திற்குமுன் கூறும்போது எவ்விதமா யிருக்கும்? இப்போது கடைசியாய் ஒரு சமாசாரம் இருக்கிறது. தாயார் சீக்கிரம் அதை யுங்களுக்குக் கூறுவார்கள். அதென்னவெனில் நாங்கள் சம்பாஷித்துக்கொண்டே யிருக்கையில் ஒரு கடிதம் வந்தது'' என்றாள்.

முத்:—"ஆ ஒரு முக்கியமான கடிதம். இளவரசருடைய அரண்மனையிலிருந்து வந்திருக்கவேண்டும்'' என்றாள்.

மீனா:--ஆம். இராணியிட மிருந்து.

மூத்தவளாகிய இரங்கம்மாள், "ஆ! அதைக்கேட்க நான் மிக்க சந்தோஷமடைகிறேன்'' என்றாள்.

ஞான:—மீனம்பாள்! எல்லா ஏற்பாடும் செய்து முடிவாய் விட்டதா தெரியுமா?

மீனம்:—"முடிவாய்விட்டதென்றே நம்புகிறேன். எப்படியாயினும் அம்மாள் இளவரசனைக் காண இரத்னபுரிக்குச் செல்லப் போகிறார்கள். திரும்பி வரும்போது நாமனைவரும் தட்சணம் பிரயாணத்திற்குத் தயாராயிருக்கவேண்டுமென்று சமாசாரம் கொண்டு வருவதாய் நம்பியிருக்கிறார்கள்'' என்றாள்.

அம்பு:—அடடா இராணியின் கடிதம் நேற்றே வந்திருந் தால் அம்மாள் இங்கேயே இளவரசனிடம் யாவும் பேசி முடிவு செய்துகொண் டிருப்பார்கள்.

இர:—ஆயினும் ஐந்தாறு மணி வித்தியாசத்தில் ஒன்றும் கெட்டுபோய் விடாது. ஆகா என்ன புதுக்காட்சிகளை யினிக் காணலாம்!

மீனு:—"ஆகா! நமக்குப் பதிலாக நான்கு விட நாகங்களை யனுப்புவார்களாயின் அவர்கள் நாகவேதனை யெவ் வளவோ குறைவாயிருக்கும்" என்றாள்.

இர:—"உஸ் உஸ்! என்ன பேச்சு நீகூறுவது. நீ யினி யிப்ப டிப் பேசுவது கொஞ்சங்கூடத் தகுதியானதல்ல. நமது தாயார் நம்மை யெவ்வளவோ நல்ல சுகத்தில் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். இப்போதும் நமது க்ஷேமத்திற்கே இவ்வளவு பாடும் படுகிறார்கள். அதை யெல்லாம் இப்போது மறந்து அப்படிப்பட்ட தாயின் விருப்பத்திற்கு விரோதமாய் நடப்பது பெருந் துரோக மான பாதகச் செயலாகும். இனி யிம்மாதிரி பேசாதே" என்றாள்.

மீனும்பாள் அவர்கள் பூரணமாய் அத் துர்க்கிருத்தியத் திற்கு மனதார உடன்படுகிறார்களென்றும், அவர்கள் இனி நல்வழிக்குத் திரும்பார்களென்றும், இன்னமும் தான் அவர் களுக்கு நற்புத்தி கூறின் தனக்கே கெடுதியாய் முடியுமென் றும் உணர்ந்துகொண்டு, தன்வரையில் தான் தப்பித்துக் கொள்ளத் தீர்மானித்து,

"ஆம் ஆம். காரியம் மிஞ்சிவிட்டது. இனி அதைப் பற்றி யோசிப்பதில் பயனில்லை. மூன்றுபேர் ஒருவழியில் இணங்கிவிட்டபின் நான் ஒருத்தி மாறுபடுவதில் பிரயோசன

மில்லை. நானும் உங்கள் அபிப்பிராயத்திற்கு இணங்கிவிட வேண்டியதே'' என்று தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டவள்போல் கூறினுள்.

அவள் வார்த்தைகளைக் கேட்ட மற்ற மூன்று சகோதரிகளும் கடைசியில் அவள் தங்கள் மார்க்கத்திற்கு ஒப்பி வந்துவிட்டாள் என்று சந்தோஷமடைந்து அவளிடம் சந்தோஷமாய்ப் பேசி அவளை முகஸ்துதிசெய்து தட்டிக் கொடுத்தார்கள்.

---

12 - வது அத்தியாயம்.

மேற் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த அதேவாரம் செவ்வாய்க்கிழமை மாலை 3 - மணி யிருக்கும். மதனவாசத்தின் மேல் மாடியிலுள்ள ஒரு அலங்காரமான அறையில் மதனவல்லி உல்லாசமாய் ஒரு சோபாவில் உட்கார்ந்துகொண் டிருக்கிறுள். அவள் மிக்க அலங்காரமாயுடை யணிந்து அடிக்கடி தன் வனப்பை எதிரிலிருக்கும் பெரிய நிலைக்கண்ணுடியில் பார்த்துக்கொண்டு உடை முதலியவற்றிலுள்ள சிறு குற்றங்களைச் சரிப்படுத்திக்கொண்டு உட்கார்ந் திருக்கிறுள். அவள் வாசிப்பதாவது, தைப்பதாவது, பின்னுவதாவது முதலிய ஒரு வேலையும் செய்யாமல் வீதியில் எதாவது வண்டி போகும்போதெல்லாம் அது தன் வீட்டெதிரில் நிற்கிறதாவென்று ஜாக்கிரதையோடு கவனித்துக்கொண் டிருந்தாள். இதனுல் அவள் யாருடைய வரவிற்கோ யெதிர் பார்த்துக்கொண் டிருக்கிறுளென்று நன்கு அறிந்துகொள்ளலாகும். அவள் உட்கார்ந்திருக்கும் அறையிலுள்ள சாளரங்களில் வீதியின் பக்க மிருப்பவைமட்டும் மூடப்பட் டிருக்கின்றன. தோட்டத்தின் பக்கமாய் இருப்பவைமட்டும் திறந்திருக்கின்றன.

சுமார் மூன்று மணிக்கு அவள் கடியாரத்தைப் பார்த்து விட்டு எழுந்துபோய் பெட்டியிலிருந்த ஒரு கடிதத்தை யெடுத்து வாசித்தாள். அதில் கீழ்க் கண்டபடி யிருந்தது:—

“ஸர்தார் சூரிய நாயகம் பிரபுவிடமிருந்து சௌபாக்ய வதி மதனவல்லியம்மாளுக்கு—

நான் நேற்று நீ குடியிருக்கும் வீட்டிற்குச் சம்பந்தமான தோட்டத்தை விலைக்கு வாங்கிக்கொண் டிருக்கிறேன். அதில் சில வீடுகளிருக்கின்றன. அவற்றில் நீ வசிக்கும் வீடும் சேர்ந்திருக்கின்றது. இப்போது நான் இந்த வீடுகளில் சில மாறுதல்களைச் செய்ய உத்தேசித்திருக்கிறேன். ஆனால் நீ வசிக்கும் இல்லத்தைப்பற்றிய மாறுதல்களை உன்னோடுகலந்து பேசி யுன் அபிப்பிராயத்தை யறியாமல் எதுவும் செய்ய எனக்கு விருப்பமில்லை. ஆகையால் இன்று மாலை 3 மணிக் கும் 4 மணிக்கு மிடையில் நான் உன்னிடம் வந்து கலந்து பேசும்படி யனுமதியளிக்கக் கோருகிறேன்.

10-7-14.}

இப்படிக்கு
உன் தரிசனத்தை விரும்பும்
ஸர்தார் சூரிய நாயகம்.”

மதனவல்லியின் அன்பைப் பெற ஆறுபேர் போட்டி போட்டுக்கொண்டு முறை யேற்படுத்திக் கொண்டதில், திங் கள் கிழமை முறைப்படி குமாரவேல் பிரபு சென்று அவமா னத்தோடு திரும்பியதை முன்னமே கூறியிருக்கிறோம். செவ்வாய்க்கிழமையாகிய இன்று ஸர்தார் சூரிய நாயகம் பிரபுவின் முறை யென்பதை நண்பர்கள் மறந்துவிடலாகாது.

மதனவல்லி அக்கடிதத்தைப் படித்துப் பார்த்து விட்டு “சரி இன்று இவனுடைய முறைப்படி யிவன் வருகிறான். ஒரு மர்மமுமின்றி வெளிப்படையாய்த் தெரிகிறது. பேஷ்

நல்லவேடிக்கை. நல்ல பெரியமனிதர்கள்" என்று தனக்குத் தானே புன்னகையோடு கூறிக் கொண்டாள்.

இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் மிக்க உன்னதமாகிய ஒரு குதிரைவண்டி வீட்டெதிரில் வந்துநின்றதும் சூரியநாய கம்பிரபு வண்டியினின்றிழிந்து வீட்டிற்குள் நுழைந்தார். அவர் சுமார் 27-வயதுடையவரென்றும் மிக்க நாகரீகமா யுடுப்பவரென்றும் சாதுர்யமாய்ச் சம்பாஷிப்பவரென்றும் முன்னமே ஒருவாறுய்க் கூறியிருக்கிறோம்.

மதனவல்லி அவர் அறைக்குள் வந்ததும் தக்க மரி யாதைசெய்து தன் ஆசனத்திற்குச் சற்று எட்டவிருந்த ஒரு அழகிய ஆசனத்தில் உட்காரவைத்தாள். மதனவல்லி ஓரே பார்வையாய் அவரைப் பாதாதி கேசமட்டும் குறிப் பாய்ப் பார்த்து விட்டு "சரி. இவன் நமக்குக் கூறப்பட்ட படி ஒரு எழுத்துகூட பிசகாமல் சரியாயிருக்கிறான்" என்று தன் மனத்திற்குள்ளேயே கூறிக்கொண்டாள்.

சூரிய நாதனே அவளை ஒரு விநாடியில் ஏற யிறங்கப் பார்த்து, "ஆகா! இவள் நாம் கேள்விப்பட்டதைவிட அதிக அழகுடையவளாயிருக்கிறாள்" என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டான். அவன் ஆசனத்திலுட்கார்ந்ததும் மதனவல் லியை நோக்கி,

"நான் இந்தப் பூமியை விலைக்கு வாங்கியபடியால் இங்குள்ள வீடுகளில் சில மாறுதல்களையுண்டாக்க வேண்டி நேரிட்டது. இதனால் உனக்குத் தொந்திரை கொடுக்க நேரிட் டதற்காக மிகக விசனப்படுகிறேன். இதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். நான் இத்தகைய அலுவலாய் வந்ததை விட உன்னையொரு தேவதையாய்க் கருதி உன்னைத் தரிசிக்க வந்திருந்தால் மிக்கத் திருப்தியாயிருக்கும்" என்றான்.

மதனவல்லி:—தாங்கள் வீட்டு விஷயத்தைப் பற்றி எல்லா ஏற்பாட்டையும் செய்தபின் அதற்கு வேண்டிய பத்திரம் எழுதும்போது அதில்கூட இம்மாதிரி முகஸ்துதியான வார்த்தைகளை யுபயோகிப்பீர்போ லிருக்கிறது.

பிரபு:—இத்தகைய சந்தர்ப்பத்தில் அப்பத்திரத்தை இனமாகவே கொடுத்து விடுவது நலம்.

மதன:—தாங்கள் புதிதாய் வாங்கிய ஒவ்வொரு வீட்டிலுள்ளவர்களிடம் இதே உதாரமாய் நடந்து கொண்டால் மிக்க இலாபமே கிடைக்கும் என்று நம்புகிறேன்.

பிரபு:—ஆனால் இந்த ஏற்பாடு பிரத்யேகமாய் உனக்கு மட்டுமே யிருந்தால்?

மதன:—அப்படியாயின் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஏனெனில் மற்ற வீட்டுக்காரர்கள் என்மேல் பொறாமை கொள்வார்கள்.

பிரபு:—ஏன் அவர்களுக்குச் சங்கதியே தெரியா திருந்தாலோ?

மதன:—உதாரகுணமான செய்கைகள் எப்போதும் இரகசியத்தில் வைக்கப்படாது. தாங்கள் வந்த விவகாரம் நடக்கட்டுமே. தாங்கள் இத்தோட்டத்தை விலைக்கு வாங்கியதாகவும் இவ்வீடுகளிலெல்லாம் சில மாறுதல்கள் உண்டாக்கப்போவதாகவும் கூறினீர்களல்லவா?

பிரபு:—ஆம் ஆம். அது விஷயமாய் உன்னுடைய அபிப்பிராயங்களை யறியவேண்டுமென்பது என் விருப்பம்.

மதன:—அந்த விஷயத்தைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாதே.

பிரபு:—"இது விஷயத்தில் நான் உன்னோடு கலந்து பேசும்படி இடந்தாலாகாதென்று தீர்மானித்துக்கொண்

டிருக்கிருயோ ” வென்று நகைத்துக் கொண்டே கூறினன்.

மதன:—இது விஷயத்தில் யோசனை செய்யவேண்டிய அக்கரையே யெனக்கில்லை. நீர் வீட்டைச் சுற்றி சுவர் வைத்து விடாதவரையில் அதைப்பற்றி யெனக்கொரு அவசியமுமில்லை.

பிரபு:—நான் வந்த வேலையைப்பற்றி உனக்கு அக்கரையின் றேல் எனக்குப் பின்னும் சந்தோஷமே. ஏனெனில், உன் அறிமுகத்தைப் பெற்றுல் சில நாட்களிலாயினும் உன்னுடைய நட்பைப்பெறலாம்.

மதன:—சினேகம் என்ற வார்த்தையின் உண்மைப்பொருள் பிரபுக்கள் கூட்டத்தில் பூரணமாய் மறைந்துவிட் டிருக்கிறது.

பிரபு:—ஆ! நீ உலகில் உண்மையான சினேகம் இருக்கிற தென்று நீ நம்பமாட்டாய்போ லிருக்கிறது.

மதன:—ஆயினும் இரண்டுபேர் இரண்டொரு நிமிடங்கள் அறிமுகமாய் விட்டதிஞலேயே சினேகம் உண்டாய் விடுமென்று நம்பிவிடலாகாது.

பிரபு:—உண்மைநேசம் ஒருவரை யொருவர் கண்ட இரண் டொரு நிமிடங்களில் உண்டாய்விடும்.

மதன :—இதுவரையில் நான் அம்மாதிரி நேரிடக்கூடு மென்று கேள்விப்பட்டதே யில்லை.

பிரபு:—நான் கூறியது அவ்வளவாய்ச் சினேகத்தைப் பற்றி யல்ல. காதலைப்பற்றியே நான் கூறியது.

மதன:—ஆகா! பேஷ். ஒரு வீட்டுக்காரர் வீட்டில் சில மாறு தல்களை யுண்டாக்க வருகிருர். வந்து சற்றுநேரம் சம்

பாஷிப்பதற்குள் வீட்டில் வசிக்கும் ஒரு ஸ்திரீக்குக் காதலைப்பற்றிய பிரசங்கம் செய்கிறார். நல்லவேடிக்கை.

பிரபு:—ஏனெனில் அந்த ஸ்திரீயின் இணையற்ற வனப்பே அச் சம்பாஷணையைத் தூண்டுகிறது. நான் களங்க மின்றி மனம் விட்டு இப்போது கூறப்போகும் சங்க திக்கு என்னை மன்னிக்கவேண்டும்.

மதன:—தாங்கள் பேசப்போவது வீட்டில் மாறுதல் செய்யப் போவதைப்பற்றித் தானே?

பிரபு:—தயவுசெய்து அந்த வீட்டுச் சங்கதியைப்பற்றி அடியோடு மறந்துவிடு. அப்படி பேசும் பட்சத்தில் என்னுடைய பூமி ஆஸ்திமுழுமையும் உனக்குப் பாத காணிக்கையாய் வைத்துவிட ஆயத்தமா யிருக்கிறேன் என்று கூறுவேன்.

மதன:—நீர் முன்னமே இந்த வீட்டை யெனக்குப் பரிசாயளித்துவிட்டீர். இப்போது உமது முழு ஆஸ்தியையும் எனக்கு முன்பின் காணாத புது மாதுக்கு - இனமாய் யளிக்கிறீர்கள் - பேஷ் இது நல்ல வேடிக்கை.

பிரபு:—இல்லை யில்லை. நான் கூறுவது உண்மையே. நான் கூறும் நிபந்தனைகளை நீ கோபிக்காமல் ஏற்றுக்கொண்டால்......

மதன:—என்ன நிபந்தனை?

பிரபு அவள் முன் முழங்காற்படியிட்டுப் பணிந்து "ஓ அழகிய மாதே! கலியாணம்" என்றான்.

மதன:—எழுந்திரும்! எழுந்திரும்! இது மிக்க வெட்கக்கேடான விஷயம். நீர் கூடியவரையில் களங்கமற்றுப் பேசுகிறவர். ஆதலால் எனக்கு உம்மேல் கோபமுண்டாகவில்லை. ஆனால்.......

பிரபு:—நான் கூறுவது உண்மையென்று நீ கருதவில்லை போல் காண்கிறது.

மதன:—நீர் மணம் செய்துகொள்ள விரும்புவது உண்மையல்லவென்று நான் கருதும் பட்சத்தில் என் ஆட்காரனை யழைத்து உம்மைப் யிந்த க்ஷணமே வீட்டைவிட்டு வெளியில் தள்ளும்படி செய்வேன். ஆனால் நீர் கூறுவது உண்மையென்று கருதுவதால், மரியாதையாகவே கூறக் கருதினேன் இரண்டொரு நிமிடங்கள் அறிமுகமாவதற்குள் இம்மாதிரி நீர் பேசுவது எவ்வளவு வெட்கக்கேடான காரியம் என்பதை நன்றுய்ச் சிந்தித்துப்பாரும் என்று கூறிக்கொண்டே கடிகாரத்தைப் பார்த்தாள்.

இம்மொழிகளைக் கேட்ட பிரபுவின் முகம் வெட்கத்தாலும் கோபத்தாலும் மாறுதலடைந்தது. அவன் மனதைத் தேற்றிக்கொண்டு, "நான் இதற்குமுன் உன்னைக் காணவில்லையென்பது உண்மையே. ஆனால் நான் பலதரம் தூரத்தில் நின்று உன் வனப்பைக் கண்டு சந்தோஷ மடைந்திருக்கிறேன்.

மதன:—இருக்கலாம். ஆனால் நான் உம்மேல் பிரியங் கொள்ளவில்லை. ஆகையால் இவ்விஷயம் பேசி முடிவாய்விட்டதாய்க் கருதவேண்டும். நீர் இம்மாதிரி யோசனையின்றி பேசியதைப்பற்றி நான் ஒருவருக்கும் கூறவில்லை.

பிரபு:—இதற்காக உனக்கு வந்தன மளிக்கிறேன். ஆயினும் இனி அப்போதைக் கப்போது உன்னைவந்து காணவாவது அனுமதி யளிப்பாய் என்று நம்புகிறேன்.

மதன:—இப்போது நேர்ந்த சம்பவத்திற்குப்பின் இனி நாம் ஒருவரை ,யொருவர் தரிசிப்பது சற்றேனும் விரும்பத்

தக்க விஷயமாகாது. உமக்கும் அப்படித்தானிருக்கும் என்று நம்புகிறேன்.

பிரபு:—அப்படியாயின் நான் வந்தால் உன் வேலைக்காரர்கள் என்னை வீட்டிற்குள் விடமாட்டார்களென்று கருது கிறேன்.

மதன:—"இங்கு வரவும் வேலையாட்கள் உள்ளே விட மாட்டோமென்று கூறவும் அவ்வளவு தூரத்திற்கு வைத்துக்கொள்ள மாட்டீர்களென்று நம்புகிறேன்" என்றாள்.

பிரபு மறுகிமிடம் வீட்டைவிட்டு வெளிப்பட்டு வீதியி லிருக்கும் தன் வண்டியில் வந்து ஏறினர்.

வண்டி புறப்படும்சமயம் யாரோ,"வண்டியைநிறுத்து!" என்று ஒரு உறத்த சத்தங் கேட்டது. மறுகிமிடம் கபுர் கிருஷ்ணன் வண்டி யருகில் வந்து சாளரத்திற்குள் தலையை நீட்டி "ஆ சூரியநாயகம் பிரபுவே! தாங்கள் மதனவாசகத் திற்குள் இருந்து வெளியில் வருவதைக்கண்டேன்" என் ருன்.

பிரபு:—ஆ! போதும் போதும் உனக்கென்ன அரை ரூபாய் வேண்டுமோ ஒரு ரூபாய் வேண்டுமோ ? இந்தா......

கபூர் கிருஷ்ணன்:—"பேஷ். ஆயினும் இப்போது எனக் கொன்றும் வேண்டுவதில்லை" என்ருன்.

பிரபு:—ஆ! இது மிக்க அதிசயமே. நீ சில்லரை வேண்டா மென்று கூறியதை நான் இதுவரை கேள்விப்பட்டதே யில்லை. ஆகா! எனக்குள் ஒரு யோசனை யுதிக்கிறது.

கிரு:—அதென்ன யோசனை ?

பிரபு:—இன்று இரவு ஒன்பது மணிக்கு உன் கூட்டாளி யாகிய எச்சனை யென்னிடம் அனுப்பு. நான் நல்ல

வருமானம் கிடைக்கக்கூடிய ஒரு வேலையைப்பற்றி தெரிவிக்கிறேன்.

கிரு:—ஆகா. அப்படியே எச்சனை கட்டாயம் குறித்த வேளைக்கு உம்மிடம் வரும்படி செய்கிறேன். ஆகா ஒருசமயம் தங்களிடம் அரை பவுன் ஒரு பவுன் சில்லரை யிருக்குமாயின்......

பிரபு:—"இதோ ஒரு பவுன். இனி வண்டிக்காரனை வண்டி விடும்படி கூறு" என்றான்.

கிருஷ்டன் அவ்வாறே சாரதியை வண்டிவிடும்படி கூறிவிட்டுப் பிரபுவுக்கும் வந்தனமளித்துச் சென்றான்.

* * * *

* * * * *

மேற்கண்ட சம்பவம் நடந்த அதே தினம் இரவு ஏழு மணி வேளைக்கு கத்தி கத்திரி முதலியவைகளுக்கு சாணை பிடிப்பவனும் சாவிகள் செய்து கொடுப்போனுமாகிய ஒருவன் இராமாபுரி என்ற கிராமத்திற்குள் பிரவேசித்தான். அவன் தன் சாமான்களடங்கிய வண்டியைத் தனக்குமுன் தள்ளிக்கொண்டே "சாணை! சாணை!" என்று கூவிக்கொண்டே வீதியில் நுழைந்தான்.

அவன் குட்டையாய் நல்ல தேகவலிவுடையவனாகவே காணப்பட்டான். அவன் கைகள் மாசடைந்து இருந்தன; உடையும் பலவிடங்களில் கிழிந்து மாசடைந்திருந்தது. அவன் சாணைபிடிப்பது, சாவி போடுவதோடு குடைகள் பழுது பார்ப்பது முதலிய சில்லரை வேலைகளையும் செய்பவன்.

அவன் கூவிக்கொண்டே இரண்டு மூன்று வீதிகளைக் கடந்து மாகதவல்லியம்மாள்: தன் நான்கு புத்திரிகளோடு வசிக்கும் வீட்டிற்கு எதிரிலுள்ள மேட்டினருகில், முன்பு

இளவரசன் அவ் வீட்டிற்கு வந்திருந்தபோது தானவன் என்பவன் ஒளிந்திருந்தவிடத்திற்கு சமீபத்தில் தன் சாணை வண்டியை நிறுத்தினன். அவன் அங்கு தன் வண்டியை நிறுத்தி விட்டு ஒரு சுருட்டைப் பற்ற வைத்துக்கொண்டு மாகதவல்லியம்மாளுடைய வீட்டை அக்கரையோடு பார்த்துக்கொண்டே யிருந்தான்.

அச்சமயம் அவ் வீட்டிலிருந்து வெளிவந்த ஒரு வேலைக்காரன் "ஓ! சாணை! என்ன சோம்பேரியைப்போல் உலவிக்கொண்டிருக்கிருயே! " என்ருன்.

சாணைபிடிப்பவன்:—"செய்ய வேலையிருக்கும்போது நான் சோம்பேறியல்ல. தக்க கூலிகொடுத்தால் என் வாய் கூட ஒன்றும் பேசாது" என்ருன்.

வேலைக்காரன்:—"கூலி கொடுத்தால் வாய்கூட பேசாதென்ருயே அதன் அர்த்தமென்ன?" என்ருன்.

சாணை:—நான் ஒன்றும் குற்றமாய்க் கூறவில்லை. எப்போதும் வேலைக்காரர் ஒருவரிடம் செய்கிற வேலையை வேருெருவரிடம் கூறலாகாது. அவ்வளவே நான் கூறியது.

வேலைக்காரன் அவனை யுற்று நோக்கி, "நீ கூறியதை யான் குற்றமாய் நினைக்கவில்லை. அப்படியானல் நீ என்னிடம் ஒருவேலை செய்வதானல் அதை வேருெருவரிடமாவது ஹோட்டலிலாவது வெளியிட மாட்டாயோ?

சாணை:—அய்யோ கடவுளே! எந்த மடையன் அப்படிச் செய்வான். அப்படிச் செய்தால் யாராவது என்னை நம்பி என்னிடம் வேலை கொடுப்பார்களா? நான் அத்தகைய வேலைகள் எத்தனையோ செய்து கொடுத்திருக்கிறேன்.

வேலைக்காரன்:—எத்தகைய வேலைகள்?

சாணை:—ஒன்றுமில்லை. உன் வரையில் இருக்கட்டும். ஒவ்வொரு சமயங்களில் பெரியமனிதர்கள் வீட்டிலிருக்கும் வேலைக்காரர்கள் பலவித இரகசிய வேலைகள் கொடுப்பதுண்டு. அப்படிப்பட்டவற்றைத் தலைபோனாலும் நாம் இன்னொருவரிடம் கூறக் கூடாது.

வேலைக்காரன் சட்டென்று வீட்டின் பக்கமாய்த் திரும்பிப் பார்த்துக் கொண்டே "போதும் போதும். இவ்வளவு கெட்டியாய்ப் பேசாதே; நீ நல்ல யோக்கியனென்று நன்ருய்த் தெரிகிறது. இன்று எங்கிருந்து வருகிருய்?

சாணைக்காரன்:—இரத்னபுரியிலிருந்து எசமானே. காட்டுப்புறத்தின் பக்கமாய்க் கொஞ்சகாலம் போயிருக்க வேண்டும்......அது ஒரு விஷ..........................

வேலையாள்:—கண் சிமிட்டி ஆ.......ஆ.......அந்த விஷயம் தெரிந்துகொண்டேன். நகரில் ஏதோ ஒரு விஷயத்தில் சம்பந்தப்பட்டுவிட் டிருக்கிருய். அது மறையுமட்டும் தலை மறைந்துகொண் டிருக்கவேண்டு மல்லவா?

சாணை:—ஆம் ஆம் அம்மாதிரியே. நீ நல்ல ஆசாமியாய்த் தெரிகிறவரையில் உன்னிடம் கூறுவதில் எனக்குப் பயமில்லை. இங்கோம் பேசியதில் நாவரண்டு விட்டது. கொஞ்சம் பீராவது வாங்கித்தா லாகாதா?

வேலைக்:—"பீர் மட்டுமல்ல. நான் கூறுகிற ஒரு வேலையை மட்டும் செய்து கொடுத்துவிட்டால் உனக்கு வேண்டிய அளவு பீர் வாங்கித் தருவதோடு, ரொக்கமாய் ஒரு பவுனும் கொடுக்கிறேன்" என்ருன்.

சாவிக்காரன் ஒரு பவுன் என்றதைக் கேட்டதே மிக்க வியப்படைந்து,

"ஒரு பவுனு? அய்யா நான் காலையிலிருந்து சரியாய் ஒரு அணுகூட சம்பாதிக்கவில்லை. என்னை யேனையா யிம் மாதிரி கேலி செய்கிறீர்?" என்றான்.

வேலைக்:—"நான் கூறுவது கேலி யென்றும் உண்மையென்றும் இப்போதே காட்டுகிறேன்" என்று தன் ஜேபியிலிருந்து ஒரு சவானை யெடுத்துக் காட்டி "இதோ பார்த்தாயா? ஆனால் நான் கொடுக்கிற ஒரு சாவியை இன்னொரு பூட்டின் சாவியைப்போல் செய்துவிடுவாயா?" என்றான்.

சாவிக்:—"ஆ! இம்மாதிரி வேலையே நான் பலவிடங்களில் செல்வந்தர்களுடைய வேலைக்காரர்களுக்குச் செய்து கொடுத்திருக்கிறேன். அச்சமயங்களில், நான் செய்து கொடுத்த ஒரு வாரத்திற்குள் அவ்வீடுகளில் கள்ளர் புகுந்துவிடுகிறார்கள். அச்சொத்தாவது கள்ளராவது அகப்படுவதேயில்லை" என்று இரகசியமாய்க் கூறினான்.

வேலைக்காரன் புன்னகைபுரிந்து "சரி சரி நீ பழைய ஆசாமியே. ஆனால் எவ்வளவு நேரத்தில் செய்து கொடுப்பாய்?" என்றான்.

சாவிக்:—"அதில் இரண்டுவிதங்கள் உண்டு. நீ ஒரு சாதாரண சாவியைக்கொடுத்து அதை எல்லா சாதாரணப் பூட்டுகளையும் திறக்கும்படி செய்யச் சொன்னால், அதைச் சீக்கிரமாகவே செய்துவிடலாம். இன்னொன்றுவது, நீ இரண்டு சாவிகளைக் கொடுத்து அதில் ஒன்றைப்போல் மற்றொன்றைச் செய்யச் சொன்னால் அந்த வேலை சற்று அதிகநேரம் பிடிக்கும். எந்தமாதிரி

வேலையாயினும் நான் ஒரு மணி நேரத்தில் செய்துவிடுவேன்'' என்றான்.

வேலைக்காரன் "சரி, போதும். உன் வண்டியைப் பாதைக் கப்புறம் இருக்கும் அதோ அந்த மரத்தின் மறைவில் கொண்டுபோய் வைத்திரு; நான் இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் வருகிறேன்'' என்று கூறிச் சென்றான்.

அந்த வேலைக்காரன் இருக்கும் வீடு மரகதம்மாள் வீடென்று முன்னமே கூறினோம். அவன் பெயர் சாரங்கன். அவன் கூறியவாறே இரண்டு நிமிடங்கள் கழித்து கையில் ஒரு குடையையும் இரண்டு கத்தரிக்கோல்களையும் எடுத்துக்கொண்டு திரும்பிவந்து, சாணைக்காரனை நோக்கி,

"இதோ இது சமையல் காரியின் குடை இதைப் பழுதுபார்க்கவேண்டும். இக்கத்தரிக்கோல்கள் வேலைக்காரியுடையது. இவற்றைச் சரியாய் செய்'' என்று கெட்டியாய்க் கூறிவிட்டுப் பிறகு தாழ்ந்த குரலாய் "இச்சாவிகள் இரண்டும் என்னுடையன. இந்தப் பழைய சாவியைக் கூடவிருக்கும் சாவியைப்போல் புதிதாய்ச் செய்துவிடவேண்டும்'' என்றான்.

சாணைக்:—சரி நான் ஒரு கேள்வியும் கேட்கமாட்டேன். நீ போய் முக்கால் மணி நேரங் கழித்து வா. எல்லா வேலையும் முடிந்துவிட் டிருக்கும்.

வேலைக்காரனாகிய சாரங்கன் சென்றதே சாணைக்காரன் முன் இரண்டு கத்தரிக்கோல்களையும் சாணை பிடித்துவிட்டு குடையையும் பழுது பார்த்துவிட்டுக் கடைசியில் இரண்டு சாவிகளையும் உற்றுப் பார்த்தான். இரண்டும் சிறிய சாவிகளே யாயினும் ஒன்றுக்கொன்று மிக்க வித்தியாசமாயிருந்தது. சாணைக்காரன் "ஆ! இந்தப் பள பளப்பான சாவி

மிக்க உயர்ந்த பூட்டின் சாவி. ஆயினும் பார்ப்போம்'' என்று தனக்குத்தானே கூறிவிட்டுத் தன் வண்டியிலிருந்த ஒரு கள்ள அறையைத் திறந்து அதிலிருந்த அனேகம் சாவிகளை யெடுத்துப் பார்த்து அவற்றிலிருந்த ஒன்றை யெடுத்துக்கொண்டு வேலைக்காரன் கொடுத்த சாவிகளில் பழைய சாவியைத் தன் பெட்டியில் போட்டுக்கொண்டு வேலைக்காரன் வரவிற்கு எதிர் பார்த்திருந்தான். அவன் தான் இரத்னபுரியில் ஏதோ குற்றம் செய்துவிட்டுப் போலீஸ்காரனுக்குப் பயந்துகொண்டு ஓடிவந்துவிட்ட தாய்ச் சாடையாய்க் கூறினனேனும் அவன் நடக்கையைப் பார்த்தால் உள்ளத்தில் பயமுடையவனாய்த் தோன்றவில்லை.

சற்று நேரத்திற்குள் சாரங்கன் வீட்டிலிருந்து வந்து "என்ன ? வேலை முடிந்தா ?'' என்றான்.

சாணக்:—"முடியாவிட்டால் இப்போது உலவிக்கொண் டிருப்பேனா ?'' என்று கத்தரிக்கோல்களையும் குடைகளையும் சாவிகளையும் அவனிடம் கொடுத்து இதோ இவை யிரண்டில் நீ கொடுத்த சாவி யெது காட்டு பார்ப்போம்'' என்றான்.

வேலைக்:—"ஆம், உண்மையே; இரண்டிலும் வித்தியாசமே தெரியாது. நீ சாவியைச் செய்தது ஒருபக்க மிருக்க இதற்கு மெருகு கொடுக்கவே ஒரு மணி நேரம் செல் லுமே ?''

சாணக்:—"எனக்கு இவ்வேலை தெரியும் என்று முன்னமே கூறினே னல்லவா! இனி எடு பணத்தை. நான் சீக்கிரம் செல்லவேண்டும்'' என்றான்.

வேலைக்காரன் "இந்தா நான் சொன்னபடி சாவிக்காக ஒரு சவரன். இதோ இந்த அரைபவுன் மற்ற வேலை

களுக்கு" என்று ஒன்றரை பவுன் அவன் கையிலளித் தான்.

சாணைக்:—"மிக்க வந்தனம் எஜமானே. நல்ல பீர் எந்த ஹோட்டலில் கிடைக்கும்?" என்றான்.

சார:—"என் வீதியின் கோடியில் இருக்கும் ஹோட்டலில் நல்ல தினுசு அகப்படும். யாவும் மிக்க நேர்த்தியா யிருக்கும்" என்றான்.

உடனே சாணைக்காரன் அவனுக்கு வந்தன மளித்து விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

---

12 - வது அத்தியாயம்.

ஒரு மணி நேரங்கழித்து வீதியின் கோடியிலிருக்கும் ஹோட்டலுக்குள் சாரங்கன் நுழைந்தான். அப் போது இரவு ஒன்பது மணி யிருக்கும். உள் சென்று ஹோட்டல் காரனுக்குத் தன் வழக்கம்போல் வந்தனமளித்து விட்டு மறுபடி என்னமோ நினைத்துக் கொண்டு, ஹோட் டல் காரனை நோக்கி "இங்கே சாணைபிடிக்கும் ஒரு மனிதன் சற்று குட்டையானவன் வந்திருக்தானு?" என்றான்.

ஹோட்டல்காரன் "ஆம் ஆம்" சற்று முன்னே வந்து கொஞ்சம் பீர் மாத்திரம் அருந்தி விட்டுச் சென்றான். ஏன் அதைப் பற்றி இவ்வளவு அக்ரையாய்க் கேட்கிறாய்?" என் றான்.

சார:—"ஒரு விசேஷமுமில்லை. அவன் எனக்குக் கொஞ்சம் வேலைசெய்தான்; வேலைமுடிந்தபின் எங்கே போகிறு யென்று கேட்டதற்கு இங்கு வருவதாய்க் கூறினன்.

மற்றபடி யொன்றுமில்லை. மூலையறையில் யாராவது இருக்கிறார்களோ?"

ஹோட்:—இரண்டுபேர் இருப்பதுபோல் காண்கிறது. அவர்களில் ஒருவன் நீ யிங்கு இருக்கிறாயாவென்று உன்னைப் பற்றி விசாரித்தான். அவன் முன்பு உன்னோடு கூட இங்கு வந்திருக்கிறான்.

சாரங்கன் அலட்சியமாய் "யாரோ எனக்குத் தெரிந்தவனாயிருக்க வேண்டும். இருக்கட்டும் மற்றவன் யார்?" என்றான்.

ஹோட்:—யரோ தெரியாது ஒரு நாட்டுப் புறத்தான் என்பது மட்டும் உண்மை. உனக்கென்ன தேவை?

சார:—"உன்னிடமுள்ள உயர்ந்தசரக்கு" என்று கூறிவிட்டு மூலையிலுள்ள அறைக்குச்சென்றான். அவன் அறைக்குள் சென்றபோது ஹோட்டல்காரன் கூறியபடி இருவர் அங்கிருந்தார்கள். ஒருவன் தன் சினேகனான தானப்பன். மற்றவன் சுமார் முப்பத்தைந்து வயதுள்ளவன். பயிர் வேலை செய்பவன் போல் காணப்பட்டான். அவன் அறையின் ஒரு மூலையில் உணவு அருந்தி கொண்டிருந்தான்.

சாரங்கன் உள்ளே சென்றதே தானப்பன் "பார்த்தாயா வேளைக்குச் சரியாய் வந்து விட்டேன். நான் வந்து கால்மணியாயிற்று" என்றான்.

சார:—"என்ன சமாசாரம்?" என்றான்.

தானப்பன் மூலையிலிருக்கும் நாட்டுப் புறத்தானைக் குறிப்பாய் கண் சாடை காட்டி "இம்மனிதன் இருக்கிறான் இரகசியமாய்ப் பேசு" என்று கூறுவதுபோல் சமிக்கைச் செய்து "ஒன்றும் விசேஷமில்லை" யென்றான்.

சார:—அப்படியானல் நாம் எண்ணியபடி இரவு யாவும் அப்படியே நிறைவேறியது.

தான:—அப்படியே தடையின்றி.

மறுபடி இருவரும் கண்சிமிட்டிச் சாடையாய்ப்பேசிக் கொண்டார்கள்.

இதற்கிடையில் நாட்டுப்புறத்தான் சாப்பிட்டு விட்டு காற்காலியிலேயே சாய்ந்தபடி கொறட்டைவிட்டுக்கொண்டு நித்திரை செய்யத் தொடங்கினன்.

சார:—"இளைய சீமாட்டிகளெல்லாம் நாளைக்குச் செல்கிறார்கள்; மரகதவல்லிச் சீமாட்டியும் நானும் வேலைக்காரப் பெண்களும் மட்டுமே வீட்டிலிருப்போம். அவர்கள் நாளைகாலை புறப்படுகிறார்கள்" என்று கூறிவிட்டு மெதுவாயெழுந்து போய் நாட்டுப்புறத்தானைப் பார்த்து அவன் கண்களை மூடிக் கொண்டு நித்திரை செய்கிறான் என்று கண்டு தானப்பனருகில் திரும்பி வந்து தன் ஜேபியிலிருந்து ஒரு சிறிய சாவியை யெடுத்துக் காட்டினன்.

தான:—"பேஷ். சரி" என்றான்.

சார:—"இதைச் சாணைபிடிக்கும் ஒரு கள்ளப் பயலிடம் வாங்கினேன். அவன் இவ்வேலையில் கைதேர்ந்தவன்" என்று மெதுவாய்க் கூறிவிட்டுச் சாவியை முன்போல் சேபியில் வைத்துக்கொண்டான்.

பிறகு சற்றுநேரம் இருவரும் சுருட்டு பிடித்தார்கள். சற்று நேரங்கழித்து நாட்டுப்புறத்தான் கொறட்டை விடுவதைக் கேட்டதும் தானப்பன் "அவன் நன்றாய்த் தூங்குகிறான்" என்றான்.

சார:—“மண்ணுங்கட்டிபோல் தூங்குகிறுன். இனி நீ என் பாகத்தை எடுப்பதுதானே. நீ கையில் பணத்தைக் கொண்டுவந்திருக்கிரு யென்றே நம்புகிறேன்” என்ருன்.

தான:—“இதோ பத்துபவுன் - நேற்று முன் பணமாய்ப் பத்துபவுன் வாங்கிக்கொண் டிருக்கிருய். இராத்திரி வேலையில் உனக்குச் சேரவேண்டிய பங்கு சரியாய் விட்டது” என்று பவுன்களை யெடுத்துக் கொடுத்தான்.

சாரங்கன் அவனுக்கு வந்தனமளித்துவிட்டு, “அப்படி யாயின் இரவு வேலை திருப்தியாய் நடந்துவிட்டது?” என்ருன்.

தான:—சரியாய் நிறைவேறியது.

இளவரசனும் அந்தச் சுகசிங்கம் பிரபுவும் பேசாமல் அடங்கி விட்டார்கள். தாங்கள் கொண்டு போகப்பட்ட விடம் எந்த வுலகத்தி லிருக்கிறதென்று அவர்களுக்குக் கடுகளவேனும் தெரியாது. மொத்தத்தில் இரவு நடந்த சங்கதி முழுதும் நல்ல வேடிக்கையா யிருந்தது” என்ருன்.

சார:—“விபரமாய்க் கூறு பார்ப்போம்.

தானவன், “இச்சமயம் வேண்டாம். இப்போது நாம் பேசவேண்டிய முக்கியமான சங்கதி வேறே யிருக்கிறது” என்று கூறியபின், மெதுவாய் “அந்தப்பயல் உண்மையாகவே நித்திரை செய்கிருனு?” வென்ருன்.

சார:—“ஆம் ஆம் மெய்யாகவேதான் தூங்குகிருன்” என்ருன்.

தான:—“சரி, இனி நடக்கவேண்டிய வேலை யெப்படி? கன்னிகைகள் நாளை காலை போகிருர்கள். நீ சாவி

தயாராய்ச் செய்துவைத்துக்கொண் டிருக்கிறாய் அல்லவா?''

சார:—ஆம். நான் சாவி யெப்படி சரிப்படுத்துவதென்று பெரிய கலவரத்தி லிருந்தேன். நல்ல அதிஷ்டமாய் அந்தச் சாவீண பிடிக்கும் கள்ளப்பயல் வீதிவழியே கூவிக்கொண்டு வந்தான்.

தான:—நீயும் நற்காலமாய் சாவியை அச்சமயம் வைத்துக் கொண் டிருந்தாய்?

சார:—இரண்டு மூன்று நாட்களுக் கொருதரம் அந்த வெள்ளிச் சாமான்களை வெளியி லெடுத்துத் துலக்கி இரும்புப் பெட்டியையும் சுத்தி செய்வது வழக்கம். அச்சமயம் சாவி சிலமணிகள் நேரம் என்கையி லிருக்கு மென்று முன்னமே கூறினே னல்லவா. வெள்ளி சாமான்கள் பெட்டியில் வைக்கப்பட்டுவிட்டால் அந்த நிமிடமே அம்மூதாட்டி சாவியை வாங்கிக்கொள்வாள். அப்புறம் ஒரு விநாடிகூட அதை யவள் கைவிட மாட்டாள்.

தான:—சரி—அந்த வெள்ளிச் சாமான்கள் எல்லாவற்றின் மேலும் இளவரசனுடைய முத்திரை போடப்பட் டிருக்கிறதல்லவா ?

சார:—ஆம். சிறு கரண்டியின் மேல்கூடத் தப்பாமல் முத் திரைபோடப்பட்டே யிருக்கிறது.

தான:—அவை யாவும் களவு போய்விட்டதென்று தெரிந் ததே பெருங் குழப்பம் உண்டாகும். அந்தச் சாவீண பிடிப்பவன் அதைக் கேள்விப்பட்டால் சந்தேகங் கொண்டு வந்து சங்கதியைக் கூறிவிடமாட்டானே ?

சார:—அப்படிப்பட்ட சந்தேக மிருந்தால் அவனிடம் அந்த வேலையைக் கொடுப்பேனு? நான் முன்னடி யவனே

யாண்டு பார்த்து அவன் சங்கதி யாவும் தெரிந்து கொண்ட பிறகே வேலையைக் கொடுத்தேன். அவன் இரத்னபுரியில் இரண்டொரு சில்லரை வேலைகள் செய்துவிட்டு செந்தலை புலிகளுக்கு மறைந்து கொண்டு கொஞ்சகாலம் தலைமறைந்திருக்க வேண்டி நாட்டுப் புறங்களின் பக்கமாய் வந்து விட்டான். இவ்வளவு தெரிந்து கொள்ளாமலா நான் இப்படிப்பட்ட வேலை யை யவனிடம் கொடுப்பேன்?

தான:—நீ மிக்க யுக்தியும் முன் சாக்கிரதையு முடையவ னென்று எனக்குத் தெரியும். இனி நடக்கவேண்டிய சங்கதி எப்படி?

சார:—வேளை நாழியைப்பற்றி நியேகூறு. இதோ பார் இந்த வேலை உன்வரையிலும் என்வரையிலுமட்டுமே. இதில் வேறு யாருக்கும் சம்பந்தம் கிடையாது. உனக்கு இது பெரிய சந்தர்ப்பம்.

தான:—ஆம் சந்தேகமே இல்லை. ஆனல் அக்கிழ நரியினி டம் மோசம் போகாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண் டும். இந்தத் தரம் மட்டும் அவன் சரியான விலை கொடுக்காவிட்டால் பார் அந்தக்கள்ளப்பயலை யிதோடு முடித்து விடுகிறேன்.

சார:—"நீ யிப்படி கெட்டியாய்ப் பேசாதே" யென்று மூலை யில் தூங்குபவனைக் குறிப்பாய்க் காட்டினன்.

தான:—ஆ! நான் மறந்துவிட்டேன். ஆயினும் இந்தப் பயிர் வேலை செய்வோர்கள் பன்றியைப்போல் தூங்கு வார்கள். வீடு தீப்பிடித்தால்கூட இவர்களுக்குத் தெரி யாது. இனி நடக்கவேண்டிய ஏற்பாடு?

சார:—நீ இராத்திரிக்கு இரத்னபுரிக்குப் போகிருயோ?

தான:—சந்தேகமென்ன? இன்றேல் நாளை காலை ஏழு மணிக்கு என் வேலையி லெப்படி யிருப்பேன்?

சார:—ஆ நீ அந்த க்ஷவரகன் வேலை செய்துகொண் டிருப்பது மிகத் தந்திரமான சாமார்த்தியம். ஆனால் உன் முகத்தைப் பார்த்து ஆசாமிகள் உன்னை நம்பித் தங்கள் தலையை உன் கையில் கொடுத்துவிட்டுக் கத்தி கழுத்தண்டை வரும்போது பயமின்றி யிருக்கிறார்களே அதுதான் எனக்கு மிக்க வியப்பா யிருக்கிறது.

தான:—போதும் போதும். நமது தலைகளை நாமே செய்துகொள்வதில்லை. அப்படி செய்துகொள்வதாயின் நான் என் முகத்தை மிக்க அழகானதாகவே செய்துகொண் டிருப்பேன்.

சார:—அப்படி செய்துகொண் டிருந்தால் இப்போதிருக்கும் மகிடவாகனன் * வேலைக்குத் தகுதியுடையவனாகமாட்டாயே. ஆகா இப்போதுதான் உன் கொடூரமான முகத்திற்கும் அந்தக் கௌரவம் பொருந்திய உத்தியோகத்தோடு கத்தியைக் கையாடும் க்ஷவரகன் வேலைக்கும் வீதிக்கு நீயே பெரிய மனிதனா யிருக்கிறாய்.

தான:—"ஏது இன்று பீர் சற்று அதிகமாய் ஏறிவிட்டதுபோ லிருக்கிறது வீண் கதையெல்லாம் உளறிக்கொண் டிருக்கிறாய்" என்று சற்று கோபத்தொடு கூறினான்.

சார:—அடட! கேலி செய்வதுகூடப் பொறுக்கவில்லையோ. உனக்குக் கோபமூட்டவேண்டு மென்று நான் பேசுகிறேன்.

---

*மகிடவாகனன்=எமன். தானப்பன் இராஜாங்கத்தில் மரண தண்டனை யடைந்தவர்களைத் தூக்கிற போடும் வேலையிலிருப்பவனாதலால் அப்பெயர் அளிக்கப்பட்டது.

186537
சென்னை-600 003

மாதவி மாதவன் அல்லது

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

(2 - பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் அவரை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி பிள்ளை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும், படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

“ஆனந்தபோதினி”

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஹு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-௱-௱-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாந் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும் ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 64 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ...	4	0	தினகரசுந்தரி	1	0
			தபால்கோள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	ரத்தினாபாய் ...	1	12
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம் 2பாகம் ...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	10
ஆனந்தஸிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ...	9	10	மதனாம்பாள் 2 பாகமும்	3	0
			லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட், மதராஸ்.